ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23] சோபகிருது ஆண்டு தைத்திங்கள் 10—2—64 [இத



ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

ரகசியத்தைப்
பாழான வாயால்
ரவுபகல் எந்நேர
மின்றிக் — குரல்நெரியக்
பிட்டுங் காணுமோ
கோழைமட நெஞ்சேமால்
பிட்டுங் காணுப்
பொருள். 14

ர் :-

வித்துவான்.

சமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்

ரியாசிரியர் :-

வித்துவான்,

சொ. சிங்காரவேலன், M. A.

உ

குருபாதம்

“ஞானசம்பந்தம்”

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23	10–2–64	இதழ் 3

உட்பொருள்

எண்		பக்கம்
1	பிறவியின் பயன்	... 141
2	வணக்கம்	... 146
3	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை	... 147
4	சித்தாந்த வினாவிடை	... 157
5	அருள்வாக்கு - V	... 162
6	அஞ்சொல் தமிழோர் புகழ் வேளூரரசன்	... 165
7	சஹஸ்ராகமம்	... 172
8	சிவவழிபாடும் சங்க நூல்களும்	... 176
9	தொல்காப்பியச் சொல்லதிகார விளக்கக் கட்டுரைகள்	... 181
10	சிவாலய தரிசன முறை	... 184
11	செய்திகள்	... 187
12	எதிர்காலம்	... 194
13	மதிப்புரை	... 156

அட்டைப்பட விளக்கம்

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்குத் தைச் செவ்வாய்த்திருநாள் நிகழ்கிறது.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23] சோபகிருது - தை - 10—2—64 [இதழ் 3

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

பிறவியின் பயன்

" மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச்சுரம் அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்."

— திருஞானசம்பந்தர்.

தைத்திங்கள் உணவு வளத்துடன் உணர்வு வளமும் பெருக்கும் பெருமை உடையது. உணவு மட்டும் வாழ்வுக்கு உறுதுணை யன்று. உணவுடன் உணர்வும் பெருகுதல் வேண்டும். உணர்வு பெருகினாலேயே உயிர் தழைக்கும்.

உணர்வு தழையாதபோது உணவினுற் பயன் இல்லை. தைத்திங்கள், உடல் வளர்க்கும் உணவு - செந்நெல்லும் கரும்பும் செழிக்கும் திருவளர் திங்கள்; அத்துடன் தைச் செவ்வாய், தைப்பூசம் இரண்டும் இத் திங்களில் சிறப்புற நின்று செந்நெறி காட்டுகின்றன. ஒன்று முருகனுக்குரிய முதன்மையது; மற்றது சிவனுக்குரிய செம்மையது. திருஞானசம்பந்தப் பெருமானுர் சீகாமரத் திருப்பதிகத்தில், திருமயிலையில் பாடியருளிய பசுந்தமிழ்ப் பாமாலையில் தைப் பூசத்தின் தவநெறி மாண்பு காண்கின்றோம். அதனுடன் தைப்பூசம் பெண்களுக்குரிய பெருவிழாவாகத் திருஞான சம்பந்தர் வாழ்ந்த காலத்தில் சிறப்புறக் கொண்டாடப் பெற்றிருக்க வேண்டும் என்றும் உணர்கின்றோம். புழுக்கிய சோற்றை நெய்யுடன் கலந்து இறைவனுக்கு நிவேதித்து வழிபடும் மரபையும் ஆளுடைய பிள்ளையார் அறிவிக்கின் ருர்கள். மார்கழி நோன்பு கொண்டாடுங்கால் வைணவப் பெண்டிர் மேற்கொண்டொழுகும் முறையை விளக்கும் திருப் பாவையில் 'நெய்பெய்து முழங்கை வழிவார'க் கூறுவது போல், இங்கும் இம் முறையைக் காணலாகின்றது. தைப் பூசம் காணுமலேயே சென்றதால் பூம்பாவை பிறந்தும் பயன் பெருது போயினள் என்ற இரங்கற் குறிப்பைப் 'போதியோ" என்ற அருள் நறுந் தொடர் விளக்குகின்றது அன்றே?

பூசத் திருநாளில் பொன்னுர்சடைப் புண்ணியனைப் போற்றிசைத்து அவன் பெருமை கொண்டாடுதலை இன்றும் மேற்கொண்டு உயர்வடைதல் இன்றியமையாதது. அவனை நினைக்கவும், அவன் புகழ் பேசவும், அவனுக்குத் திருப்பணி செய்யவுமே நம் மனம், மொழி, மெய் இவற்றோடு சார்ந்த இம் மானுடப் பிறவி நமக்கு இறைவனுல் தரப்பெற்றது என்ற அறிவை ஆறறிவுடைய மனிதன் மறந்துவிடலாமா? மறந்துவிடுதலும், தன் மனம் போன போக்கில் நடத்தலும் முறையாகுமா? பெருமானை வாழ்த்துதல் யார்க்காக? அவனுக்கு அதனுல் சிறிதும் பயன் உண்டா? நாம் வாழ்வ தற்காக - நம்முடைய வாழ்க்கைக்காக, நாம் இறைவனை வாழ்த்துகின்றோம். அவ்வாறு வாழ்த்திப் பரவும் வகையில்

ஏற்பட்ட நோன்புகள், விரதங்கள், உற்சவங்களை யறிந்து அவற்றைப் பின்பற்றி நல்லன எல்லாம் நல்கப் பெறுவதனையே மனிதப் பிறவியின் பயனாகக் கொள்ளவேண்டும்.

பொருள் தேடிப் பொருள் தேடி அலமந்து, புகழ் தேடிப் புகழ் தேடிச் சுழன்று, உலகியல் மயக்கம் ஒன்றிலேயே திளைத்து வாழும் வாடிக்கை மனிதர்களுடைய வாழ்வையெல்லாம் கண்டு நம் சமயச் சான்றோர் மனம் சலித்தார்கள்; வருந்தினார்கள். 'ஐயோ! இவர்கள் வாழ்வு வீணாகிறதே; இவர்கள் எந்தக் காலம் கடைத்தேறுவது' என்றெல்லாம் மனங்கசிந்தார்கள். 'தாயைவிட நல்ல அன்புடையவன் இறைவன்; அவனுடைய தண்ணளியைப் பெறாது இவர்கள் வாடுகின்றார்களே! சார்ந்தவர்க்கு எல்லாம், ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் வரை அனைத்துக்கும் இன்பம் அளிக்கும் ஏந்தலாக உள்ள இறைவன் இருக்க, இவர்கள் அவன் அடித்தொண்டர்களுடைய திருவுள்ளத்திற் கிசையத் தொண்டு செய்து உய்யாது மாயம்பட்ட மனத்தராய் மறுகுகின்றார்கள்' என்று ஆளுடைய அரசர் அருளிச் செய்கின்றார்.

திருநாமம் ஆகிய திருவைந்தெழுத்தைச் செப்பினாரில்லை; செம்மேனி எம்மானின் பெரும் புகழை ஒருகாலும் உரைத்து உளம் குளிர்ந்தாரில்லை; மாதேவன் உறையும் திருக்கோயிலை ஒருமுறையும் வலம்வந்து வணங்கினாரில்லை; உணவு உண்ணுதற்கு முன்னால் மலர் பறித்து வணங்கி ஏத்தி உண்டாரில்லை; தீராத நோய்களும் தீர்ந்திடத் திருவெண்ணீறு அணிந்து உளங்குளிர்ந்தாரில்லை; நெஞ்சில் அன்பு கொண்டார்களா எனில் அதுவும் இல்லை; அந்தோ! இவர்கள் தம்மை நோய்கள் வருத்தப் பிறந்தும் இறந்தும் பேரிடரில் வீழ்கின்றார்களே! என்று திருநாவுக்கரசுப் பெருந்தகை திருவுளம் கசிகின்றார்கள்.

இவ்வாறு பெற்ற வாழ்நாளை வீணே கழிக்கவிடாது பயனுடைய வாழ்நாளாக ஆக்கிக் கொள்ளுவது பண்புடையார் கடனாகும். பூசத் திருநாளில் இறைவனை அழகு

குளிர அபிடேகம் முதலியன செய்து கண்குளிரக் கண்டு வாழ்வும் குளிர்தல் வேண்டும்.

இனி, தைச் செவ்வாயில் திருப்புள்ளிருக்குவேளூரில் ஸ்ரீ செல்வமுத்துக்குமரனுக்குச் சீர் விழா. என்றும் இளைய பெருமானுய் உள்ள முருகப் பெருமானுக்கு எடுக்கும் இனிய விழாவாக இஃது உள்ளது. இந்நாட்களில் வள்ளி தெய்வ யானையோடு கூடி நீலச் சிகண்டியில் ஏறித் தன்னை வழிபட வருவோர்க்கு வரையாது அருளை வாரி வழங்குவதுடன், 'இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி' என்றபடித் திருவீதிகளிலும் திருவுலாப் போந்து திருவருள் வழங்கு கின்ருன் குமரப் பெருமான். தைச் செவ்வாய்த் திருநாளில் இங்குப் போந்து, சித்தாமிர்தத் தீர்த்தத்தில் நீராடி, 'தீராத வினைதீர்க்கும் தம்பிரானையும், அத்தம்பிரான் தழலுருவில் ஒருபாதி குளிர ஒருபுறம் நின்ற தையல்நாயகியையும், அவ் விரண்டு கடவுளரும் வைத்துச் சீராட்ட விளையாடும் சேனு பதிக் கடவுளாம் செல்வமுத்துக்குமரனையும் வழிபடுவோர்க்கு இருமை நலங்களும் பெருகும் என்பது கண்கண்ட அநுபவ மாகும்.

முருகனை வழிபட்டவர்க்கு அச்சம் இல்லை; 'பச்சை மயில்வாகனமும் பன்னிரண்டு திண்டோளும், அச்சமகற்றும் அயில்வேலும்' கொண்டு, எழுந்தருளி அடியவர்களுக்கு முன்னின்று காக்கும் முழுமுதற் கடவுள். அவனுடைய வேலை துணை என்று நம்பி வழிபடுவோர்க்கு வினை இல்லை; இன்பமே. அவர்கள், அருணகிரிநாதரைப்போல், காலனை யும் கண்ணஞ்சாது நோக்கி 'ஆரடா' எனக் கேட்கும் உறுதி உடையவர் ஆவர்.

'வேலாயுதன்; சங்கு சக்ராயுதனுகிய திருமாலும், பிரம னும் அறியாத சூலாயுதன் பெற்ற கந்தச்சுவாமி; காலாயுதக் கோடி உடையோன்; அவனுடைய அருளாகிய கவ்சம் உண்டு. என்பால் இனி யமனே வந்து ஏவினுலும் ஆயுதம் அணுகமுடியுமோ' என்று உறுதியாகக் கேட்கும் அருணகிரி நாதர் திருவாக்கை மறத்தலும் ஆமோ?

'குமரா' சரணம் சரணம் என்று அன்பர் கூட்டங்களெலாம் துதிக்க அவன் அமராவதியில் உள்ளான்; அவனுடைய ஆறுமுகத்தையும் தரிசித்தால் அருள்வீறு பெருகும். அத்தகைய ஞானதபோதனர் மீது எமராசன் விட்ட கடையேடு வந்து இனி என்செய்யும்' என்று அப்பெருமானுர் வினவுவதற்கு யாரே விடை கூறவியலும்?

இத்தகைய அஞ்சாத பெருவீரம், ஆன்மவீரம் நம்பாலும் வளர்வதாக என்று முருகன் திருவடி மலர்களை முட்டாது இறைஞ்சுவதே நம் முதற் கடனும்.

தைப் பூசத் தரிசனம் செய்து வழிபட்டுத் தவம் பெருக்கிய நல்லன்பர்களுக்குத் தைச் செவ்வாயையும், தமிழ்த் திருத்தலத்தையும், தமிழ்ப் பெருங் கடவுளையும் நினைவூட்டுகிருேம்; புள்ளிருக்குவேளூரானைப் போற்றி உய்ந்து, தாமும் வாழ்ந்து உலகையும் வாழ்விக்க - எடுத்த பிறவியின் பயனை இனிதே பெற வேண்டுகின்ருேம்! "நன்மை பெருகு அருள் நெறியே விளங்குக ஞாலம் எல்லாம்!"

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam,
Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

Came to the temple with family and had the opportunity of worshipping the deity with mental satisfaction. I am impressed with the cleanliness of the temple premises. I had a good darshan to day.

(Sd.) Muthukamatchi.
P. A. to the Collector (P. D.)
7—1—64 Thanjavur.

வணக்கம்

இம்மாத இதழில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் மெய்கண்டசாத்திர விரிவுரைத் தொடரில் சிவஞான போதம் பற்றிய அருளுரையை வழங்கியருளியுள்ளார்கள். சைவசித்தாந்தக் கொள்கையை வகைப்படுத்திய மெய்கண்ட தேவரின் சிவஞானபோத விளக்கமாக திருமுறை இலக்கிய மேற்கோள்களோடு விளங்குகிறது அருளுரை. மேலும் சிவஞான போதப் பிழிவாகவும் விளங்குகிறது எனலாம்.

முன்னிதழ்களில் தொடர்ந்து வந்த சித்தாந்த வினவிடை சகஸ்ராகமம், அருள்வாக்கு, என்பவை இவ்விதழில் தொடர்ந்து இடம்பெற்றுள்ளன. புதிதாகச் சிவாலய தரிசன முறை, சிவ வழிபாடும் சங்ககாலமும் என்ற தொடர்கட்டுரைகளும் வெளிவருகின்றன. அஞ்சொல் தமிழோர் புகழ் வேளூரரசன் என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றும் சிறப்பாக அமைந்துள்ளது இதில் வேளூர் முத்துக்குமரனின் புகழ் பாடிய பிள்ளைத்தமிழ் நூல் நன்கு ஆராயப்பெற்றுள்ளது.

செய்திகளில் திருக்கடவூர் அபிராமி அம்பாளுக்கு நிகழ்ந்த சுக்கிரவாரவிழா, வேளூர் முத்துக்குமரப் பெருமானுக்கு நிகழ்ந்த தைச்செவ்வாய்த் திருவிழா, ஆலவேலி ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில் கும்பாபிஷேக நிகழ்ச்சி, ஏகதின லக்ஷார்ச்சனை முதலிய செய்திகளும் சென்னை சமயப் பிரசார நிலையச் செய்திகளில் பொங்கல்விழா மாதவழிபாடு முதலியனவும் எதிர்காலப்பயன் தெரிய மாதப்பலன் கட்டுரையும் இடம்பெற்றுள்ளன.

இச் சிறந்த இதழை நேயர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக.

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

அருளுரை

சிவஞானபோதம்

அவனவ ளதுவெனு மவைமூ வினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கிமலத் துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்.

—மெய்கண்டார்.

உயிரினங்களில் மக்கள் சிறந்து நிற்றற்குக் காரணம் அவர்களது அறிவின் மிகுதியே. மேலும், அவர்கள் ஒவ்வொன்றையும் தாமே ஆராய்ந்து புதிதாக உணர்ந்துகொள்ளாமல் தமக்குப் பன்னெடுநாள் முன்னிருந்த பெரியோர் பலர் தம் அனுபவத்திற்கண்டு சொல்லிச் சென்றவற்றை நூல்கள்வாயிலாகப் பெற்று அறிவு முதிர்கின்றனர்.

பலவகையாலும் பெறப்பட்ட மக்கள் அறிவின் பயன், நல்லது, தீயது, உயர்ந்தது, தாழ்ந்ததுமுதலியவற்றைப் பகுத்து உள்ளவாறு உணர்தலேயாம். அங்ஙனம் பகுத்து உணர்வனவற்றுள் சமயக்கருத்துக்கள் முதன்மையானவை. ஏனெனில் அவை வாழ்க்கையின் மேலோட்டத்தினைப்பற்றி ஆராயாமல் அதன் அடிநிலையை ஆராய்ந்து உணர்த்துகின்றன. அத்தகைய சமயங்கள் பலவாய் இருப்பினும், தலையாயது சைவ சமயமே.

சைவ சமயத்திற்குத் தெளிவான முதல் நூல்கள், தேவார திருவாசகங்கள் முதல் பெரியபுராணம் ஈருய் உள்ள பன்னிரு திருமுறைகள். அவை, 'உயிர்க்கு உறுதி இதுதான்' என்று ஒரு சொல்லாக, உண்மைகளை அறுதியிட்டு உரைக்கின்றன.

ஆயினும், தெளிவில்லாத பலர், அவைகளில் பல ஐயங்களை எழுப்புகின்றனர். அதனால் அவ்வையங்களை நீக்குதற்குப் பல விளக்கங்கள் இன்றியமையாதனவாகின்றன. அத்தகைய விளக் கங்களே சைவ சித்தாந்த சாத்திரங்கள்.

சித்தாந்த சாத்திரங்கள் யாவும் சமயக் கொள்கைக்கு விளக் கங்களைத் தருவனவாயினும், 'சிவஞான போதம், சிவஞான சித்தி' என்னும் இருநூல்களே. எல்லாவகையான ஐயங்களை யும் நீக்கி முழு விளக்கத்தைத் தருவன. அவற்றுள் சிவஞான போதம் மிகச் சுருக்கமாகப் பேரறிவுடையவர்கள் மட்டுமே உணரக்கூடியதாய் உள்ளது. சிவஞான சித்தி அவ்வாறின்றி மிக விரிவானதாய் யாவரும் எளிதில் உணரும் வண்ணம் அமைந்துள்ளது.

திருமுறைகளின் விளக்கமாய் அமைந்த சித்தாந்த சாத் திரங்களின் தலைமணி நூலாய் அமைந்த சிவஞான போதம், திருமுறைகள் பன்னிரண்டானது போலவே, சூத்திரங்கள் பன்னிரண்டால் ஆகியிருத்தல் வியப்பிற்குரியது.

சூத்திரம் தொடங்குதற்கு முன்னே முகவுரையாக இரு செய்யுட்கள் உள்ளன. அவை கடவுள் வாழ்த்தும், அவை யடக்கமும் ஆகும் அவைகளிலும், இன்றியமையாத அரும் பெருங் கருத்துக்கள் பொதிந்துள்ளன.

முதற் செய்யுளாகிய,

" கல்லால் நிழல்மலை - வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர் - நல்லார் புனைவரே "

என்னும் கடவுள் வாழ்த்தில், சைவத்தின் முதற்குறிக்கோளாகிய 'சிவபிரானே முதற்கடவுள்' என்னும் கருத்துப் புலனாகும் படி வைக்கப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் வந்துள்ள,

" கல்லால் நீழல் - அல்லாத் தேவை
நல்லார் பேணார் - அல்லோம் நாமே "

என்னும் திருப்பாடல் இங்கு நினைவு கூர்தற்குரியது.

முற்காலத்தில் சமயவாதம் செய்வோர், ஒரு சமயத்தைப் பற்றி விவாதிக்குங்கால், அச்சமயத்திற் கொள்ளப்படும் தெய்வம் எது? அதன் பிரமாண நூல்கள் எவை? என்று தொடங்கி

விவாதித்தல் முறையாய் இருந்தது. இதனை, ‘மணிமேகலை’ என்னும் பழைய நூலிலிருந்து அறியலாம். சைவ சமயத்தின் உண்மைகளை நிலைநாட்ட எழுந்த சிவஞானபோத நூலிலும் மெய்கண்டார் இம்முறையிலே அமைக்கக் கருதிச் செய்துள்ளார். இது, சிவஞான போதத்தில் வெளிப்படையாகத் தோன்ருது, குறிப்பாக மறைந்து நிற்கின்றது. ஆயினும், இதன் வழி நூலாகிய சிவஞான சித்தியில், “இறைவனையும் இறைவனுல் இயம்பு நூலும்” என்று வெளிப்படையாகவே சொல்லப்பட்டு உள்ளது.

கடவுள் வாழ்த்துச் செய்யுளை அடுத்துள்ள அவையடக்கச் செய்யுளில், ‘பசுக்களாகிய தம் இயல்பினையும், பதியாகிய இறைவன் இயல்பினையும் உள்ளவாறு உணர்ந்தவர்களே எங்கட்குத் தலைவர்கள்’ என்று ஆசிரியர் கூறியுள்ளார். மேலும் பதியினை, ‘உடையவன்’ என்னும் சொல்லால் குறிக்கின்ருர்’ ஆதலுல், ‘உயிர்ப் பொருள்கள் எல்லாம் அவனுக்கு அடிமைகள்’ என்பதும், ‘பிற பொருள்களெல்லாம் அவனது உடைமைகள்’ என்பதும் சைவ சித்தாந்தத்தின் அடிநிலை உண்மைகளாதல் பெறப்படும்.

“எல்லாம்உன் அடிமையே எல்லாம் உன்
உடைமையே எல்லாம் உன்னுடைய செயலே”

என்பது தாயுமானவர் வாக்கு.

இறைவனையும், உயிர்களையும் இங்ஙனம் ஆண்டான் அடிமையாக உணரும் உணர்ச்சி சைவத்தில் அன்றி வேறு எதிலும் இல்லை. பாஞ்சராத்திரத்தில் இருப்பதுபோல் தோன்றும். ஆனுல், அதில், ‘பதி’ எனப்படும் தலைவனுகப் பசுக்களில் ஒருவனே கொள்ளப்படுகின்ருன்; அதனுல், அங்கும் தலைவனை, உள்ளவாறு உணரும் உணர்ச்சி இல்லை.

“தம்மை உணர்ந்து தமையுடைய தன் உணர்வார்”

என்ற மெய்கண்டார் வாக்குப்படி, தம்மையும் தலைவனையும் உள்ளவாறு தலைப்பட்டுணர்ந்தவர்களே உண்மை அனுபூதிமான்கள். அவர்களே சமயத் தலைவர்கள் - ஆசாரியர்கள். இந்நிலை இல்லாதவர்களை,

"தன்னை யறியார் தலைவன் றனையறியார்
முன்னை வினையின் முடிவறியார் — பின்னைக்
குருக்களென்றும் பேரிட்டுக் கொள்ளுவர்கள் ஐயோ
தெருக்கள் தனிலே சிலர்"

என்றார், எங்கள் குருஞானசம்பந்தர்.

தம்மையும் தலைவனையும் உள்ளவாறு உணர்ந்து காட்டிய அனுபூதிமான்கள் - ஆசாரியர்கள் யாவர்? ஞானசம்பந்தர் முதலிய நால்வர் சமயாசாரியர்களே. ஆகவே, 'அவர்களது வாக்குக்களே சைவ சமயத்தின் பிரமாண நூல்கள்' என்பதை மெய்கண்டார், தமது அவையடக்கத்தில் சொல்லாமற் சொல்லி யுள்ளார். 'தேவாரம், திருவாசகம்' ஆகிய எட்டுத் திருமுறை களும் ஒப்ப உயர்ந்தன என்பது ஆன்றோர் கருத்து. ஆதலால்' திருமுறைகள் பன்னிரண்டும் சைவசமயத்தின் பிரமாண நூல்கள் என்பது தெளிவு.

இனித் திருமுறைகள் வேத சிவாகமங்களைச் சிறந்தெடுத்துப் போற்றுதலினாலே, அவை பண்டைப் பிரமாண நூல்களா கின்றன. எனினும், "வேதம் என்னும் பாதவம் (மரம்) என்று கூறுதலால் (குமரகுருபரர்) அதன்கண் இலை, தளிர், அரும்பு, பூ, பிஞ்சு, காய்போன்ற பல பொருள்களும் இருக்கும். அவை யெல்லாம் பிற பிற சமயங்களுக்கே பொருந்துவன. அதன்கண் உள்ள கனியாய் இருப்பவை சிவாகமங்கள். அவைகளே சைவத் திற்குச் சிறப்பு நூல்கள். அவைகளிலும் கனியில் உள்ள கோது முதலியவைகளை நீக்கிப் பிழிந்துகொண்ட சாறு போன்றவை திருமுறைகள்.

சமய வாதத்தில், 'இறை, பிரமாண நூல்' என்பவற்றை ஆராய்ந்த பின்னர், அளவை என்பது ஆராயப்படும். அதனை மெய்கண்டார் பல இடங்களில் பலவாறு விளங்க வைத்துள்ளார். அவைகளை எல்லாம் இங்கு எடுத்துக்காட்ட வேண்டுவது இல்லை. சிவஞான சித்தியாரில் அளவையியலில் அவை ஒரு கோவையாக இனிது விளங்குகின்றன.

அளவைக்குப் பிறகு பொருள் உண்மை ஆராய்ப்படும். 'பதி பசு பாசம்' என மூன்று பொருள்கள் தோற்றமும், அழிவும் இன்றி என்றும் உள்ளன' என்பது சைவ சித்தாந்தத்தின் முதற் கருத்து. அதனையும், பிற கருத்துக்களையும் பின் வரும் பல

சூத்திரங்களால் மெய்கண்டார் விளக்கியிருப்பினும், முதற் சூத்திரத்திலேயே அவையனைத்தும் ஒருவாறு தோன்றச் செய்துள்ளார். அச் சூத்திரமே இங்கு முதலிற் காட்டப்பட்டுள்ளது.

"அந்தம் ஆதி" என்றதனால், 'உலகிற்கு அந்தத்தை (முடிவை) உண்டாக்குபவனே-சங்காரம் செய்கின்றவன் எவனோ அவனே முதற்கடவுள்' என்று குறித்தார். இதனால், 'கடவுள் உண்டு' என்பதும், 'கடவுள் ஒருவனே' என்பதும் விளங்குகின்றன. எனவே, இது, பதியுண்மை கூறியதாயிற்று.

'சங்காரக் கடவுளே கடவுள்' என்றதனால், 'ஏனையோர் பலரும் கடவுளர் அல்லர்; உயிர்களே' என்பது விளங்கிற்று. அதனால், 'உயிர்கள் எண்ணிறந்தன' என்பதும் போந்தது. ஆகவே, இது பசுவுண்மை கூறியதாம்.

"மலத்துளதாம்" என்றதனால், பாச உண்மை குறித்தார்; "ஒடுங்கிமலத்துளதாம்" என்றது, 'கன்மமலம் பரிபாகமாதற் பொருட்டு உலகம் ஒடுக்கத்தையடைந்து. ஆணவ மலம் பரிபாகமாதற் பொருட்டு, மறுபடியும் தோன்றும்' என்று பொருள்படும். முதலில், 'அவனவ ளதுவெனும் அவை' என்றது, உலக முழுதையும் குறிக்கும். "தோற்றிய" என்றதனால், 'அது, தானே இயங்காத சடம்' என்பது அறியப்படும். "திதியே" என்றதனால், சிலர் கூறுவதுபோல், இல்பொருள் அல்லது இன்னதென்று சொல்லமுடியாத பொருள் அன்று, உள்பொருளே' என்பது தெளிவாம். "மூவினைமையின்", என்றதனால், 'அது எப்பொழுதும் ஒரே நிலையில் நில்லாது, தோன்றியும், நின்றும், ஒடுங்கியும் இவ்வாறு மாறுதலடைந்தே வரும்' என்பது பெறப்பட்டது. இவையெல்லாம் மாயையின் தன்மைகளே ஆதல் வெளிப்படை. இவற்றால், 'ஆணவம், கன்மம், மாயை' என்னும் மும்மலங்களைப் பற்றிய குறிப்புக்களும் அமைந்து கிடக்கின்றன.

இன்னும், "தோற்றிய" என்றதனால், 'உலகத்தை இறைவன் தோற்றுவித்து, நிறுத்தி, ஒடுக்குவான்' என்பது உணரப்படும். அப்பொழுது யார்பொருட்டு இத்தொழில்களை இறைவன் செய்கிறான்? என்ற வினா எழும். அதற்கு "அந்தம் ஆதி" என்பதில் பெறப்பட்ட உயிர்களின் பொருட்டே என்னும் விடை அமைதலையுங் காணலாம்.

"மலம்" என்றது, 'உயிர்களைப் பற்றியுள்ள அழுக்கு' எனப் பொருள் தருதலால், 'அவ்வழுக்கை நீக்கி உயிர்களைத்

தூய்மைப்படுத்துதற்பொருட்டே இறைவன் தொழில் செய்கின்ருன்' என்பதும், 'அவன் அழுக்கில்லாத தூயவன்' என்பதும், 'அழுக்கோடு கூடியிருத்தல் உயிர்களுக்குப் பந்தம்' என்பதும், அழுக்கினின்றும் நீங்கி, தூயவனுகிய ஆண்டவனை அடைதலே உயிர்களுக்கு வீடு' என்பதும் உய்த்துணர்ந்து கொள்ளலாம். எனவே, சைவ சித்தாந்தம் முழுதும் இம் முதற்சூத்திரம் ஒன்றிலே அடங்கியுள்ளன என்று கூறலாம்.

திருஞானசம்பந்தர், தமது திருமுதுகுன்றத் திருப்பதிகத்துள்,

"விளையாததொர் பரிசில்வரு பசுபாசவே தனையொண்
தளையாயின தவிரவ்வருள் தலைவன்"

என்று ஒரு திருப்பாடலிலே சித்தாந்தத்தை வடித்தெடுத்து வழங்கியருளினர் என்று அறிஞர் கூறுவர். அத்திருப்பாடல் முதல் திருமுறையிலே உள்ளது. அதுபோலவே, மெய்கண்டாரும் முதற் சூத்திரத்திலே சித்தாந்தத்தைத் தொகுத்துக் கூறிவிட்டார். எங்கள் குருஞானசம்பந்தரும்,

"என்னை அறிவென்ருன்; என்னறிவி லானந்தந்
தன்னைச் சிவமென்ருன் சந்ததமும் - என்னை உன்னைப்
பாரா மறைத்ததுவே பாசமென்ருன் இம்மூன்றும்
ஆராய்ந் தவர்முத்த ராம்."

என்று, முப்பொருளின் உண்மையை ஒரு வெண்பாவிலே தெளிவாக அருளிச்செய்துள்ளார்.

இரண்டாம் சூத்திரத்துள் அத்துவித நிலை கூறப்படுகின்றது. அஃதாவது இறைவன், உலகத்தோடு ஒன்ருய் வேருய் உடனுய் நிற்கும் நிலை. இதுவும் ஞானசம்பந்தர் தேவாரம் திருவீழிமிழலைத் திருப்பதிகத்துள், "ஈருய்முதல் ஒன்ருய்" என்னும் திருப்பாடலில் அருளப்பட்டுள்ளது. ஒரு வகையில், சிவஞான போதத்தின் முதற் சூத்திரம் சிவத்தின் இயல்பு கூறுவதும், இரண்டாம் சூத்திரம் சத்தியின் இயல்பு கூறுவதும் ஆகும். இன்னும், இருவினை, மறுபிறப்பு முதலிய பலவும் இதன்கண் விளக்கப்படுகின்றன.

மூன்ரும் சூத்திரத்தில் உயிர், கருவி கரணங்களுக்கு வேருதல் காட்டப்படுகின்றது. மற்றும் அது, கடவுளன்று என்பதும் சொல்லப்படுகின்றது. இம்மூன்று சூத்திரங்களும், 'பிரமாண இயல்' எனப்படும்.

நான்காம் சூத்திரம் உயிர்களின் பந்தநிலையை விளக்குகின்றது. 'சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம். துரியாதீதம் என்னும் அஞ்சவத்தையின் இயல்புகளை இதில் நன்கு அறியலாம். ஐந்தாம் சூத்திரம், உணர்த்த உணர்வனவாகிய உயிர்கட்கு இறைவன் உணர்த்தும் முறைமை கூறுகின்றது. ஆறும் சூத்திரமே சிவத்தின் சொரூப லட்சணத்தை உணர்த்தும். இம்மூன்று சூத்திரங்களும், 'இலக்கண இயல்' எனப்படும்.

ஏழாம் சூத்திரத்தில் ஆன்மாவின் இயல்பு 'சார்ந்ததன் வண்ணமாதல்' என்பது விளக்கப்படுகின்றது. எட்டாம் சூத்திரம் இறைவன் குருவாய் வந்து அருளும் முறையைக் கூறும். எட்டாந் திருமுறையை அருளிய மாணிக்கவாசகர் வரலாறு இவ்வெட்டாஞ் சூத்திரப் பொருளாய் அமைந்திருத்தல் அறிந்து மகிழத்தக்கது. மேலும், எட்டாந் திருமுறையில் குருவைப் பற்றியே மிகுதியும் நினைந்து நினைந்து பாடிய பகுதிகளைக் காணலாம். ஒன்பதாம் சூத்திரம் குருவருள் பெற்ற பின்பு வாதனைமலம் தாக்காதிருத்தற் பொருட்டு ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதவேண்டிய முறை கூறப்படுகின்றது. இம்மூன்று சூத்திரங்களும், 'சாதன இயல்' எனப்படும்.

பத்தாம் சூத்திரத்தில் ஏகனாகி இறைபணி நிற்கும் முறை கூறப்படுகின்றது. இதுவே, 'சிவயோகம்' என்று சொல்லப் பெறும். இப்பத்தாஞ் சூத்திரப்பொருள், பத்தாந்திருமுறையாகிய திருமந்திரத்தில்,

"இருந்தார் சிவமாகி யெங்குந்தா மாகி
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி
இருந்தார்முக் காலத் தியல்பைக் குறித்தங்
கிருந்தா ரிழிவுவந் தெய்திய சோம்பே"

என்றும்,

"தூங்கிக்கண் டார்சிவ லோகமுந் தம்முளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமுந் தம்முளே
தூங்கிக்கண் டார்சிவ போகமுந் தம்முளே
தூங்கிக்கண் டார் நிலை சொல்வதெவ் வாறே"

என்றும் சொல்லப்பட்டது. இதனையே குருஞான சம்பந்தரும்.

"ஒருமையுடன் ஈசனருள் ஓங்கியென்றுந் தூங்கல்
அருமை அருமை அருமை - பெருமையிடும் -

பாங்காரங் கோபம் அபிமானம் ஆசைவினை
நீங்காத போதுதானே,"

என்றும்,

"ஏதேது செய்தாலும் ஏதேது சொன்னாலும்
ஏதேது சிந்தித் திருந்தாலும் - மாதேவா
நின்செயலே யென்று நினதருளா லேயுணரின்
என்செயலே காண்கிலே னே"

என்றும் கூறினர்.

பதினொன்றும் சூத்திரத்தில், 'இறைவன் உயிர்களுக்குக் காட்டும் உபகாரத்தை மட்டுமன்றிக் காணும் உபகாரத்தையும் என்றும் செய்துவருகின்றான்' என்பதும், அதையறிந்து அவனிடத்தில் அன்பு மீதூரப்பெற்றால் நிட்டைநிலை கைகூடும் என்பதும் சொல்லப்படுகின்றன. இதற்கு மூலமாய் உள்ளது பதினொன்றுந் திருமுறையில் உள்ள அற்புதத் திருவந்தாதித் திருப்பாடலே. அப்பாடல்,

"அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே யவன்"

என்பது.

பன்னிரண்டாம் சூத்திரம், அணைந்தோர் தன்மை-சீவன் முத்தரது இயல்பு கூறுவது. சீவன் முத்தர்கள்,

செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன்எனத் தொழுவார்கள்

என்கின்றது இச்சூத்திரம். இப்பன்னிரண்டாம் சூத்திரப்பொருள் தான் பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரிய புராணத்தில் நிறைந்துள்ளது. நாயன்மார்கள் அனைவரும் மாலற நேயம் மலிந்தவர் வேடத்தை அரன் எனவே தொழுது வாழ்ந்தவர்கள். சிறப்பாக, ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் என்ற மூவர் முதலிகளும் அன்பரோடு மரீஇ, ஆலயங்களில் சென்று

அவற்றில் உள்ள திருமேனிகளை அரன் எனவே தொழுவார்கள், மாலற நேயம் மலிந்த அடியார்களது வரலாற்றை வணக்க முறையிற் கூறவந்த பன்னிரண்டாந் திருமுறை, முதலில் கோயிலில் உள்ள கூத்தப்பெருமானது மலர்சிலம்படியை வாழ்த்தி வணங்கித் தொடங்கியது.

இவ்வாறு பன்னிரு திருமுறைகளாகிய அருள்நூல்களின் உண்மைகளை, சிவஞானபோதத்தின் பன்னிரு சூத்திரங்களையும் கொண்டு நன்கு உணர்ந்து உலகம் உய்தி பெறுவதாக.

கலைமகள் வாழ்த்து!

மயிலை - தமிழ்ச்செல்வன்

(வெண்பாக்கள்)

1. தெள்ளறிவும் பலகலையும் செப்பவரும் சொல்வன்மை
கொள்ளறிவும் தந்துமிகக் கோதுடைய — உள்ளிருளை
மாளும் படிசெய்வள் மாறாது நாமகளை
நாளும் துதித்துவரில் நாம்.

2. எண்ணில் மொழியின் எழிலு மிசையுடைய
திண்ணு ரறிவும் திகழ்ந்திடமா — மண்ணிலத்தில்
மெத்த கலைவேண்டில் மென்ன மகளடியை
நித்தம் மனதில் நினை.

3. கல்வியொடு ஞானமதுங் கேள்விமுத லாமழியாச்
செல்வமதை நாமடையச் செய்திடுவாள் — பல்வளஞ்சேர்
நற்று மரைமலரோன் நாயகி தன்னுடைய
பொற்றுள் களைவணங்கிற் போய்.

கோ. கலியபெருமாள்
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி,
முதலாண்டு மாணவன்.

மதிப்புரை

குமரகுருபரன்

[15 ஆவது ஆண்டு மலர்]

சைவத்திற்கும் தமிழிற்கும் உலகரியப் பணிபுரிந்து பேரறக் கட்டளைகள் நிறுவி அனைவராலும் போற்றிப் பாராட்டப் பெற்று வருபவர்கள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள். அவர்கள் அருள்வழி நின்று இளவரசு வித்துவான் ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் தொண்டு புரிந்தருளி வருகிறார்கள். குமரகுருபரனை மிக்க் திறம்பட எளிய விலையில் அரும்பொருட் கட்டுரைகளுடன் சீரிய ஆங்கில மொழி பெயர்ப்புகளுடன் தந்தருளிவருவது தமிழ்ப் பெருமக்கள் நற்பேறு. இவ்வாண்டு மலரில் சீரிய கட்டுரைகள் பல உள்ளன. உலகறிந்த முதுபெரும் புலவர் அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியற்றுரைத் தலைவர் பல்கலைச்செல்வர் பேராசிரியர், திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் திருமுருகாற்றுப்படைக்கு ஓர் அரிய புது விளக்கம் தருகின்றார்கள். நாவரசரின் நகையாடல் பற்றி அப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் திரு. G. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்கள். மற்றும், திரு. கி.வா.ஜகந்நாதன் அவர்களின் தமிழ்மணம் கமழும்முருகன் சீரருட்கட்டுரை, வாரியாரின் பக்திக்கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. அப்பர், திருமந்திரம், நீதிநெறிவிளக்கம்—ஆங்கில மொழிபெயர்ப்புகளும் அழகுறத் திகழ்கின்றன. மற்றும் சாத்திர விளக்கங்களுடன்வெளிவந்துள்ள இம்மலர் அனைவர் சிந்தைக்கும் உகந்த விருந்தாக உள்ளது. அன்பர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப்பெறலாம் :- திரு. T. M. குமரகுருபரன்பிள்ளை அவர்கள் ஆசிரியர் குமரகுருபரன் (திங்களிதழ்) ஸ்ரீவைகுண்டம்.

— சொ. சிங்காரவேலன்.

புண்டரிகத் தாளைப் புகழ்ந்து புகழ்ந்துதின
மண்டமரர் கொண்டிறைஞ்சு மாதியே—தொண்டுபடு
நாயேனை யாண்டுகந்து நன்னெறிகள் காட்டுவித்த
தாயேநீ சொக்கநா தா.

— குருஞானசம்பந்தர்.

திருவாதிரைத் திருநாளில் சிதம்பரதரிசனம் :



ஸ்ரீ சபாநாதர் திருக்கோயில் பிராகாரத்தில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானமவர்கள் அன்பர்களுடன் வலம்வருதல்.

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்



(வைத்தீசுவரன்கோயில்) பசுமடம்.

தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருக்கடவூர்
ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்



புதிதாகவாங்கப்பெற்ற யானை - அபிராமி



தில்லைக்காளி கோவில் பிராகாரத்தில்
தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம்
அவர்கள் அன்பர்களுடன் வலம் வருதல்.

சித்தாந்த விருவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

(மலர் 23, இதழ் 2, பக்கம் 99 இன் தொடர்ச்சி)

கருத்தா இன்றியமையாமை

மாணாக்கன் : சற்காரிய முறைப்படி உலகம், 'முன்னர் நுண்ணிலையில் உளதாய் இருந்து, பின்னர்ப் பருநிலையில் புலனாய்த் தோன்றும்' எனக் கொள்ளினும், அதனாலே 'உலகத்தைத் தோற்றுவித்தற்குக் கருத்தா ஒருவன் வேண்டும்' என்பது எங்ஙனம் பெறப்படும்; 'தானே அவ்வாறு தோன்றிற்று' எனக் கொள்ளலாகாதோ ?

ஆசிரியர் : ஆகாது ; ஏனெனின், உலகத்தை இல்பொருள் எனக் கொள்ளாது, உள்பொருள் எனக்கொண்டது எதனால்? இல்லது தோன்றாமையை அறிந்த கருதலளவை பற்றியேயன்றோ ?

மாணாக்கன் : ஆம் ; அதுபற்றி முன்னே பலவாறு விளக்கிய கருதலளவை பற்றியே, தோற்றமுடைய உலகம், உள்பொருளே; இல்பொருள் அன்று எனக் கொண்டோம். 'உலகம் உள் பொருள்' என்றதற்கும், 'உலகத்திற்குக் கருத்தா ஒருவன் உண்டு' என்பதற்கும் என்ன தொடர்பு ?

ஆசிரியர் : முற்றிலும் தொடர்பு உண்டு. 'இல்லது தோன்றாது' என்பதுபோல, 'உள்ளது, அதனைத் தோற்றுவிக்கின்ற முதல்வன் ஒருவன் இல்லாமல் தோன்றாது' என்பதும் ஒரு பெரிய உண்மை. இவ்வுண்மை, முன்சொல்லியதுபோல் இல்லாமல், காட்சியளவையிலே எளிதில் விளங்குவது.

எங்ஙனமெனின், குடம், ஆடை முதலியன காரியப் பொருள்கள் ; அஃதாவது ஒவ்வொரு முதற்காரணப் பொருளிலிருந்து தோன்றிய பொருள்கள் குடம், 'மண்' என்னும் காரணப் பொருளிலிருந்தும், ஆடை, 'நூல்' என்னும் காரணப் பொருளி

லிருந்தும் தோன்றியவை. ஆகவே, முன் சொன்ன சற்காரிய முறைப்படி நோக்கினல், தோற்றத்திற்கு முன்னும் அவை முறையே, மேற்காட்டிய காரணப் பொருள்களில் இருந்தனவே யாம். ஆயினும், காரணங்களில் நுண்ணிலையில் புலனுகாது இருந்த அவைகள், பருநிலையில் தாமே புலனுய்த் தோன்ருது. குயவனும், கோலிகனுமாகிய செய்வோர்களாலே தோன்றினமை கண்கூடு. இனி யாதொரு குடமாயினும், ஆடையாயினும் பிற காரியப் பொருள்களாயினும் செய்வோர் இன்றித் தோன்ருமை யும் காட்சியளவையால் பெறப்படுவதே. ஆகவே, உள்ளதாய் நின்று தோன்றும் பொருள்கள் யாவும் செய்வோனையுடையன என்பது தெற்றென விளங்கும். அதனுல், சற்காரிய முறைப்படி தோன்றுவதாகிய உலகத்திற்கு அதனைத் தோற்றுவித்தற்குக் கருத்தா ஒருவன் இன்றியமையாது வேண்டப்படுவன் என்பது வலியுறுதல் அறிக.

மாணுக்கன் : அடிகள் அருளிச்செய்ததில் சில ஐயங்கள். முதலாவது, தோற்றம் உடைய பொருள்களில், குடம் ஆடை முதலிய சில பொருள்கள் ஒருவர் தோற்றுவிக்கவே தோன்று கின்றன. மரம் முதலியனவும், பிற உயிரினங்களும் தோன்றுங் காலத்துத் தோற்றுவிப்பார் இல்லாமலே தோன்றுதல் கண் கூடன்ருே ?

ஆசிரியர் : இவ்வாறு வினவுவது நுண்ணறிவின்மையாலே யாம். என்னையெனின், 'உலகம், செய்வோனை யுடையதோ அன்ருே ?' என்னும் ஆராய்ச்சி, அறிவற்ற சடப்பொருளாகிய உலகத்தைப்பற்றியன்றி, அறிவுடைய சித்துப்பொருளைப்பற்றி யன்று. அம்முறையில் அறிவில் பொருள்களைப்பற்றிய விவாதத் திற்கு இடையில் அறிவுடைய பொருள்களை எடுத்துக்காட்டி வினவுதல் எவ்வாறு பொருந்தும் ? புல்லும் மரமுங்கூட ஓரறி வுயிர் என்பது தொல்லாசிரியர் துணிபென்பது நீ அறிந்ததே யன்ருே ?

மாணுக்கன் : அங்ஙனமாயின், தோற்றமுடைய பொருள் களில் மரம் முதலிய பொருள்கட்குக் கருத்தா ஒருவன் இல்லை தானே ?

ஆசிரியர் : இதற்குள் அந்த முடிவு ஏற்பட்டுவிடவில்லை. 'அந்த ஆராய்ச்சி இப்பொழுது இல்லை' என்று நாம் சொன் னேமேயன்றி, 'அவைகளுக்குக் கருத்தா இல்லை' என்று நாம் சொல்லிவிடவில்லை. அவைகளுக்கும் கருத்தா உண்டு ; அதைப் பின்னர்க் கூறுவோம்.

மாணுக்கன் : தோற்றமுடைய பொருள்களில் உயிரினங்களை அறிவுடையன என்று தள்ளிவிட்டால், வேறு எவை இருக்கின்றன? குடம், ஆடை, அணிகலன்போன்ற பொருள்கள் தாமே? அவை கருத்தாவை உடையன என்பதில் ஐயம் இல்லையே, மேலும் அவற்றின் கருத்தாக்கள் கடவுள் அல்லரே. ‘உலகத்திற்குக் கருத்தா உண்டோ, இல்லையோ’ என்பது தானே ஐயம்? அந்த ஆராய்ச்சியைத்தானே செய்து வருகின்றோம்?

ஆசிரியர் : உயிரினங்களாகிய அறிவுடைப் பொருள் தவிர, வேறு நிலம், கடல், காற்று, ஞாயிறு, திங்கள், விண்மீன்கள் முதலிய பொருள்கள் இல்லையோ? ‘அவை கருத்தாவை உடையனவோ, அல்லவோ’ என்ற ஐயம் உனக்கு உண்டாகவில்லையோ? உண்டாகவில்லை என்றால், அது பற்றி உனது கொள்கை என்ன?

மாணுக்கன் : ஆம்; அவையுள்ளன. அவைகள், குடம் ஆடை முதலியனபோல ஒன்றிலிருந்து தோன்றிய காரியப் பொருள்கள் அல்லவே. ‘தோற்றமே இல்லாத அவைகளுக்குத் தோற்றுவிப்பான் ஒருவன் இன்றியமையாது வேண்டப் படுவான்’ என்றல் எவ்வாறு பொருந்தும்?

ஆசிரியர் : அப்படியாயின், இதுகாறும் ஆராய்ந்து வந்த சூனிய வாதம், அனேகாந்த வாதம், சற்காரிய வாதம் எல்லாம் உயிரினங்களைப் பற்றியவைதாமோ?

மாணுக்கன் : அப்படித்தான் அடியேன் நினைத்தது. சூனிய வாதம் பேசும் பௌத்தர் தவிர, உலகத் தோற்றத்தைப் பற்றி ஆராயும் சமணர் முதலிய பலரும் உயிரினங்களின் தோற்றத்தைத்தானே ஆராய்கின்றனர்?

ஆசிரியர் : உயிரினங்களின் தோற்றமே ஆராயப்படும் பொருளாயின், அதனை நன்கு தெளிந்த பொருளாகக்கொண்டு, எடுத்துக்காட்டி, ‘அவை தோற்றுவிப்பார் இன்றித் தாமே தோன்றுதல்போல, தோற்றமுடைய உலகமும் தோற்றுவிப்பான் இன்றித் தானே தோன்றும் என்று கூறுதல் எவ்வாறு பொருந்தும்? மேலும், அவ்வாறு கூறுமிடத்து, ‘தோற்றம் உடைய உலகம்’ என்பது எதனை? இவ்வினுக்களுக்கு விடை கூறுதல் இயலாததாகும். ஆகவே, ‘கருத்தாவை உடையனவோ,

அல்லவோ ' என்னும் ஐயம் உயிரினங்கள் மட்டுமன்றி, எல்லாப் பொருள்களையும் பற்றியதே; 'தோற்றமுடைய உலகம்' என்பது எல்லாப் பொருள்களையும் குறிப்பதே.

மாணுக்கன் : அப்படியாயின், சமயவாதிகள் அனைவரும் 'உலகம்' என்னும் சொல்லுக்குப் பொருளாய் நிற்கும் எல்லாப் பொருள்களும் தோன்றி யழிவனவே; அவற்றுள் ஒன்றேனும் தோற்றமும் ஈறும் இல்லாத பொருள் இல்லை என்பதில் ஒத்த கருத்து உடைவர்தாமோ ?

ஆசிரியர் : இல்லை. வேதத்துக்குப் புறம்பான மதவாதிகளுள் பௌத்தரும், வேத மதங்களில் மீமாஞ்சகர் தவிர ஏனையோரும் இதில் ஒத்த கருத்து உடையவர்கள். ஏனைய உலகாயதர் (நாத்திகர்), சமணர், மீமாஞ்சகர் இவர்களெல்லாம், 'உயிரினங்கள் மட்டுமே தோன்றியழியும்; ஏனைய நிலம் முதலியன அவ்வாறின்றி என்றும் உள்ளனவே' என்பர். அங்ஙனம் கூறுமிடத்து, 'தோன்றும் பொருள், வித்தினின்றுந் தோன்றும் மரம்போலத் தானே தோன்றும்' என்பது, சூனிய வாதம், அனேகாந்த வாதம் என்பவற்றுக்குப் பொருந்துமே யன்றிச் சற்காரிய வாதத்திற்குப் பொருந்தாது; ஏனெனில், சூனிய வாதமும் அனேகாந்த வாதமும் அறிவும், அறிவல்லாததும் ஆகிய பொருள்கள் ஒன்று, வேறுவேறு ? என்பதுபற்றித் திட்டமாக யாதும் கூறவில்லை. சற்காரிய வாதம், அறிவும், அறிவல்லாததும் வேறே; உள்ளது தோன்றும் அன்றி இல்லது தோன்றுமையின், அறிவல்லாத பொருளில் அறிவு என்றும் தோன்றுவதில்லை' எனக் கூறுகின்றது. ஆதலின், அதனை உடன்பட்ட பின்னர், அறிவில்லாத நிலம், நீர் முதலியவற்றின் தோற்றத்திற்கு அறிவுடைய உயிரினங்களின் தோற்றத்தை எடுத்துக் காட்டுதல் பொருந்தாதாகும்.

மாணுக்கன் : அங்ஙனமாயின், குடம், ஆடை முதலிய உவமானங்கள், உயிரினங்களின் தோற்றத்திற்குப் பொருந்தாதன்றே ?

ஆசிரியர் : இல்லை, 'உயிரினங்கள்' என்பவை தனிப் பொருள்கள் அல்ல; அறிவுப் பொருளும், அறிவு அல்லாத பொருளுமாகிய இரண்டும் ஒன்றாய்க் கூடியனவேயாம். உயிர் அறிவுடையது; அது நிற்றற்கு இடமாகிய உடம்பு அறிவில்லாதது. இதனை, அறிவாகிய உயிர் உடம்பிற்கு வேறே, அன்றே என்னும் ஆராய்ச்சி வரும் இடத்தில் விரிவாக விளக்கலாம்.

அஃது ஐயமாய் உள்ள இந்நிலையில் அதனை நிறுத்திவைப்போம். உலகில் இயங்கிவரும் உயிரினங்கள் தனிப்பொருள்கள் அல்ல; உயிரும் உடம்பும் கூடியனவே என்பதைத் தமிழ்ச் சான்றோர் எத்துணையோ காலமாக, 'உயிர்மெய்' என்னும் எழுத்துக்களில் வைத்துக் காட்டியுள்ளனர்.

மாணுக்கன் : சாங்கிய மதத்தவரும், அடிகள் அருளியவாறே தான் எல்லாவற்றையும் கூறுகின்றனர். ஆயினும், அவருள் ஒருசாரார், 'உலகத்திற்கு முதற்காரணமாய் உள்ள பிரகிருதி என்பது, தானே தனது காரியமாகிய உலகத்தைத் தோற்றுவிக்கும்' என்கிருர்களே; அஃது எத்தகையது?

ஆசிரியர் : அவர்கள் நாம் கூறுகின்ற எல்லாவற்றையும் உணர்ந்திருந்தாலும், ஒன்றை உணர்ந்திலர். அஃதாவது 'அறிவில்லாத பொருள் தானே செயற்படுதல் இல்லை' என்பதே. எனவே, உலகம் செயற்படுகின்றது என்ருல், அஃது அறிவுடைய ஒரு கருத்தாவினுலேயாம். உலகம் மிகப்பெரிய பொருளாகலின், அதனை நடத்தும் கருத்தா, எல்லையில்லாத பேராற்றல் உடையவனேயாவன்.

மாணுக்கன் : அறிவில்லாத பொருளுக்குச் செயல் இல்லை என்பது எவ்வாறு? காந்தம் இரும்பை ஈர்க்கின்றது; நஞ்சு, பற்றிய இடத்தில் மட்டும் நில்லாது பல இடங்களிலும் பரவுகின்றது. இவை கண்கூடல்லவோ?

ஆசிரியர் : காந்தம் இரும்பை ஈர்ப்பது அவ்விரண்டையும் ஒருவன் நேர்முகமாக்கும் பொழுதுதான். நஞ்சு பரவுவதும் உயிர் உள்ள உடம்பில்தான். அதனுல், அறிவுடைய பொருள் இன்றி, அறிவில்லாத பொருள் செயற்படாது என்க.

மாணுக்கன் : அங்ஙனமாயின் உயிர்கள் அறிவுடைய பொருள் என்று குறிப்பிட்டீர்களே; அவை உலகத்திற்குக் கருத்தாவாதல் அமையாதோ?

ஆசிரியர் : அமையாது; உயிர்கள் அறிவுடையனவாயினும் அவ்வறிவு உடம்போடு கூடிய பின்பே விளங்கப்பெறும் தன்மையுடையது. அதனுல், உடம்பில்லாத உயிர்கள், உடம்பையோ மற்ருென்றையோ தோற்றுவித்தல் இயலாதாம். ஆகவே, பேரறிவுப் பொருளாகிய இறைவனே உலகத்திற்கு இன்றியமையாது வேண்டப்படும் கருத்தா ஆவன்.

(தொடரும்)

அருள்வாக்கு - VI

திரு. அ. ச. ஞானசம்பந்தம் எம். ஏ.,

இறைவனுக்கு முதல் மகன் என்று தம்மைச் சொல்லிக்கொள்கிறார் ஞானசம்பந்தர். ஆண்டவனிடம் அன்புபூண்ட தலையாய அடியார் என்ற பெயரைப் பெற்றவர் திருநாவுக்கரசர். இவர்கள் இருவரும் திருவீழிமிழலை என்ற ஊரில் ஒன்றாகச் சென்று இறைவனை வணங்க முற்பட்டார்கள். ஆனால், அந்த ஊரில் பஞ்சம் தலைவிரித்தாடுகின்றது. எந்தஊரில் பஞ்சம் என்றாலும் ஞானசம்பந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும் உணவு கிடைக்காமல் போகாதன்றோ? அப்படியிருக்க, ஓர் ஊரில் பஞ்சத்தில் அடிபட்டு மக்கள் வாழ்ந்தார்கள் என்றால், அந்த ஊருக்குச் சென்ற இந்தப் பெரியவர்கள் என்ன செய்தார்கள் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இயற்கையின் காரணத்தால் பஞ்சம்வந்துவிட்டது. அது இறைவனுடைய சோதனை. நாம் அதைப்பற்றிக் கவலைப்படுவதால் பயன் ஒன்றும் இல்லை. ஆகவே எல்லோரும் இறைவன் இடத்தில் வேண்டிக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுப் போய் இருக்கலாம். இவ்வாறு இப்பெரியவர்கள் செய்திருப்பார்களாயின் அதற்காக நாம் ஒன்றும் அவர்களைக் குறைகூறப்போவது இல்லை. நம் போன்றவர்கள் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் இம்மாதிரியாகத்தான் சமாதானம் செய்து கொள்கிறோம். "உலகத்தில் எத்தனையோ பேர், எத்தனையோ வகையான துன்பங்களை அனுபவிக்கிறார்கள். அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது. ஆகவே, நாம் யார் அவர்களுடைய துன்பத்தைப் போக்க?" என்று நம்முடைய மனத்தை நாமே சமாதானம் செய்துகொள்ளுகிறோம். ஒரு சிலர் இதனை வாய்விட்டுக் கூறவும் செய்கிறார்கள். தர்க்க முறைப்படி பார்த்தால் ஒவ்வொரு மனிதனும் உலகத்தில் வாழும் மக்களுடைய துன்பத்தையெல்லாம் துடைப்பது என்பது முடியாத காரியம் என்பதை நாம் நன்கு அறியமுடியும். எனவே, இத்தகைய சமாதானத்தை ஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் கூறியிருப்பின், அதில் ஆச்சர்யப் படுவதற்கு ஒன்றும் இல்லை. அவர்களைக் குறைகூறுவதற்கும் ஒன்றும் இல்லை.

இவ்வாறு அவர்கள் கூறிவிட்டுச் சென்றிருப்பார்களேயானுல் இதன் காரணமாக அவர்களைக் குறைகூற முடியாதே தவிர அவர்களைப் பெரியவர்கள் என்று போற்றவும் முடியாது. ஏனென்ருல், பெரியவர்களுக்கு இலக்கணம் கூறவந்த பழைய நூல் ஒன்று "பெரியவர் தம் நோய்போல் பிறர் நோய் கண்டுள்ளம் எரியின் விழுது ஆவர் என்க" என்று சொல்லிச் செல்கிறது; அதாவது பிறர் துயரத்தைக் கண்ட பெரியவர்கள், நெருப்பிலிட்ட வெண்ணெய்போல உருகுவார்களாம், ஞானசம் பந்தரும், திருநாவுக்கரசரும் திருவீழிமிழலையில் உள்ள மக்கள் பட்ட துயரத்தைக்கண்டு எரியிலிட்ட வெண்ணெய்போல உருகிய தில் வியப்பொன்றுமில்லை. ஆனுல் அதைவிட வியப்பான காரிய மொன்றைச் செய்ய அவர்கள் முற்பட்டதுதான் சிறப்பு. திருவீழி மிழலையில் உள்ள பஞ்சம் நீங்குகின்றவரையில் அவர்கள் இருவரும் தனித்தனியாக ஒவ்வொரு மடத்தை அமைத்துக் கொண்டு அந்த ஊரில் உள்ள மக்களின் பசிப்பிணியைப் போக்க முற்பட்டார்கள். நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் ஒவ்வொரு மடத்திலும் வயிருர உண்டு இப்பெருமக்க ளின் கருணையுள்ளத்தைப் பாராட்டிச் சென்ருர்கள்.

செயற்கரிய சித்துக்களைச் செய்கின்றவர்களும் இறைவனி டம் நேரிடைத் தொடர்பு கொண்டவர்களுமான இப்பெரியவர் கள், மழை பெய்யும்படியாக, நிலம் விளையும்படியாக ஒரு அற்புதத்தைக்கூட இயற்றியிருக்கலாம். அவ்வாறு செய்யாமல் அதற்குப் பதிலாக, சாதாரண மக்களைப்போல மடமொன்றை அமைத்து. அரிசியும், பருப்பும் விலைக்கு வாங்கி. அதனைச் சமைத்து, ஏழை எளியவர்கட்கு வழங்கினுர்கள் என்ருல், இதி லிருந்து அவர்களுடைய கருணையுள்ளம் நன்கு வெளிப்படுகிற தன்ருே! நாட்டில் ஒரு பெரும் தேவை ஏற்படும்பொழுது நம் அனைவரது முயற்சியும் தேவையென்று நினைக்கவேண்டும். தனிப்பட்ட நான் ஒருவன் செய்யாவிட்டால் என்ன முழுகிவிடும் என்றே நம்மில் பலரும் நினைக்கின்ருேம். பிறர் செய்த தவறு களுக்கு நாம் எப்படிப் பிணையாவது என்று கருதிக் குற்றத்தைப் பிறர் மேலிட்டு வாளாய் இருந்துவிடுகின்ருேம். இவ்விரண்டு காரியங்களும் தவறுடையன என்பதை நமக்கு முன்னர் வாழ்ந்த பெரியவர்கள் எடுத்துக்காட்டிச் சென்ருர்கள். திருவீழிமிழலை யில் பஞ்சம் வருவதற்கு எதுவேண்டுமானுலும் காரணமாக இருந்திருக்கலாம். ஆனுல் பஞ்சமென்று வந்துவிட்ட பிறகு அது வருவதற்குரிய காரணத்தையும், யார் யார் குற்றவாளிகள் என்பதையும் பெரியவர்கள் ஆராய்வதில்லை. அதற்குப்

பதிலாகப் பஞ்சத்தைப் போக்கவேண்டுமென்ற ஒரே கருத்துடன். அதற்குரிய காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்களே தவிர, குற்றத்தை யார் பேரில் சுமத்துவது என்ற ஆராய்ச்சியில் அவர்கள் ஈடுபடுவதே இல்லை. ஆண்டவனைப் பார்த்து இத்துன்பத்தை மக்களுக்கு வழங்கியிருக்கிறான். எனவே நாம் யார் இதில் தலையிட என்று இறுமாப்புடன் வாளா விருப்பதும் இல்லை. இதன் எதிராக, இத்தகைய தவற்றை நீங்கள் செய்ததினால், அந்தத் தண்டனையை அனுபவித்துத்தான் ஆகவேண்டுமென்று எங்களுக்கு அப்பொழுதே தெரியும் என்று பெரிய உண்மையைக் கண்டு விட்டவர்கள்போலச் சொல்லிக் கைகொட்டிச் சிரிப்பதும் இல்லை. இதனையடுத்துத் தாங்கள் ஒரு முயற்சியும் செய்யாமல், மற்றவர்களை நோக்கி, இந்தப் பஞ்சத்தைப் போக்கவேண்டுமேயானால், நீங்கள் எல்லாம் உங்களுடைய பழைய தவறுகளை விட்டு விட்டு, இன்ன இன்ன காரியங்களைச் செய்யவேண்டும். இன்ன இன்ன கொள்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற உபதேசம் செய்வதும் இல்லை. இவற்றிற்குப் பதிலாக தாங்களே முன்னின்று உடனடியாக எந்தக்காரியம் செய்யவேண்டுமோ அந்தக் காரியத்தைச் செய்யத் தொடங்குகின்றார்கள்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswami Devasthanam, Thirubuvanam.

It was my good fortune that excelled me to have Darsan of Lord Almighty in Sri Sarabheswara to-day. The temple is well kept and worship is carried out with "Sraddha". I am happy His Holiness the Madathipathi of Dharmapuram is looking after the temple with care and attention. They Lord Almighty protect this temple for all time to come.

(Sd.) C. R. Pattabiraman

31—1—64. Deputy Minister for L. G. & Planning,

Govnt. of India.

அஞ்சொல் தமிழோர் புகழ் வேளூரரசன்

வித்துவான். திருமதி. ப. நீலா

தீராத வினைதீர்க்கும் தம்பிரான் தையல் நாயகியுடன் எழுந்தருளி செல்வமுத்துக் குமரனைச் சீராட்டிப் போற்றும் தலந்தான் வைத்தீஸ்வரன் கோயில் என்ற புள்ளிருக்கு வேளூர். புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே என்று இரங்குகின்றார் அப்பர் பெருமான்.

பவளக் கொழுந்தென்றும், முத்து என்றும், வயிரம் என்றும், மாசில்லாப் பொன்னுருவென்றும் பலபடப் பரவுகின்றார் நாவுக்கரசர்,

மின்னுருவை விண்ணகத்தில் ஒன்றாய் மிக்கு
வீசுங்கால் தன்னகத்தில் இரண்டாய்ச் செந்தீத்
தன்னுருவில் மூன்றாய்த் தாழ்புனலில் நான்காய்த்
தரணிதலத்து அஞ்சாகி எஞ்சாத் தஞ்ச
மன்னுருவை வான்பவளக் கொழுந்தை முத்தை
வளரொளியை வயிரத்தை மாசொன் றில்லாப்
பொன்னுருவைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

குமர குருபரர் வாக்கில் குருகூர்:

1. கொத்து முத்தமிழ் மொய்த்த கந்தபுரி முத்துக்குமரன்
2. சடாயுபுரத் தருட் கந்தனைக் காக்க
3. வேதபுரி வருமிளஞ் சேயைப் புரக்க
4. ஓங்கெயில் பருதிபுரி முருகனை
5. வேதபுரி கந்தபுரி புள்ளூரெனப் பொலியும் வேளூர
6. ஆதி வயித்திய நாதபுரிக் குகன்
7. சேலார் வயற் குருகூரா தாலோ தாலேலோ
8. தினகர புரிவரு தனிமுதல் கொட்டுக சப்பாணி

என்று முத்துக்குமரன் பிள்ளைத் தமிழில் அடிகள் வேளூரின் பல பெயர்களையும் இணைத்துக் கூறிய அழகை நாம் அறிந்தின்புறுகிறோம்.

செல்வக் கந்தபுரி:

செல்வத்தின் செழுமையைக் காட்டும் உயர் மாடங்களில் பூசப்பெற்ற சுண்ணத்தின் ஒளி நிலவொளியெனப் பிரகாசிக்கும். இளவெயிலைத் திரண்மா மணிகள் விரிக்கின்றன. இத்தகைய உயர் மாடங்களிலிருந்து இளமகளிர் தம் தோகையனைய கூந்தலுக்கு அகிற் புகையிட் டாற்ற, அக்குழல் காட்டை மேகம் என எண்ணிய மென் மயில்கள் உடனே தமது தோகைகளை விரித்து ஆடத்தலைப்பட்டன. மகளிரின் இதழ்களிலிருந்து புன்னகையரும்ப அதனை நிலவென எண்ணிச் சகோரப்புள் பருகத் தொடங்கியது. இம்மயக்கக் காட்சிகளைக் கண்டு அவர்கள் வாய்விட்டுப் பெரிதாகச் சிரிக்க சந்திரகாந்தக் கற்கள் வெண்முத்தனைய பற்களின் ஒளியை நிலவொளியாகக் கருதி உருகியோடத் தொடங்கின. உருகிய நீர் கடலுடன் சேர்ந்து கடலின் உவரை மாற்றியதாம். திருவளர வளர் கந்தபுரி இது என்பதை எவ்வளவு அழகாகக் காட்டுகிறார் குமரகுருபரர்.

வேதபுரி மேவிய விமலன்:

விமலனாகிய வேலனைப் பத்துப் பருவங்களைக் கொண்டு பாடுகிறார். பிள்ளைத் தமிழ் பொதுவாக தெய்வங்களைப் பற்றியும்-மனிதருட் சிறந்தாரைப் பற்றியும் எழும். ஆண் பால் பெண்பால்-என்ற இருவகையிலும் எழுவதுண்டு.

மீனாக்ஷியம்மன் பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் இவை பெண்பாற பட்டவைகளே. காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வருகை அம்புலி இந்த பருவங்கள் பொதுவாகவும் சிற்றில், சிறுபறை, சிறுதேர் இவை ஆண்பால் பிள்ளைத்தமிழிற்கும், கழங்கு, நீராடல், ஊசல் இவை பெண்பால் பிள்ளைத் தமிழிற்கும் வரும் என்பது இலக்கணம்.

இங்கே முத்துக் குமார சுவாமி பிள்ளைத் தமிழில் செந்தமிழ்க் கந்தனை எப்படி எப்படிப் பாடுகிறார் என்பதைச் சற்றுப் பார்க்கலாம்.

'சிறுகட் பெருஞ் செவிக் குஞ்சரக் கன்றினிரு
செஞ்சரணை அஞ்சலிப்பாம்' என்று துதித்து

'சிறைவிடுத்தமரர் குறைமுடித்துதவு
சேனாபதிப் பெருமாள் தனைக் காக்கவே'

என்று காப்புப்பாடி,

'செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள
செங்கீரை ஆடி யருளே' என்று ஆடச்செய்து

'சங்கத் தமிழின் தலைமைப் புலவா
தாலோ தாலேலோ' என்று தாலாட்டுப் பாடி

'தையல் நாயகி மருவு தெய்வ நாயகன் மதலை
சப்பாணி கொட்டி யருளே' என்று கொட்டச்செய்து

'மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே' என்று முத்தந்தரவேண்டி

'அஞ்சொற் றமிழோர் புகழ் வேளூர்க்
கரசே வருக வருகவே
அருளானந்தக் கடல் பிறந்த
அமுதே வருக வருகவே' என்று வாழ்த்துப்பாடி

'அழகு பொலி கந்தபுரி தழைய வரு கந்தனுடன்
அம்புலீ ஆட வாவே' என்று அம்புலியை ஆட-
அழைத்து

'செந்நெல் பழனப் புள்ளூரா
சிறியேம் சிற்றில் சிதையேலே' என்று கேட்டுக்-
கொண்டு

'தென்கலைக்கும் பழைய வடகலைக் குந் தலைவ
சிறுபறை முழக்கி யருளே' என்று தாழ்ந்திரங்கி
திருவளர வளர் கந்தபுரி வள ரிளங்குமர
சிறுதே ருருட்டி யருளே' என்று கேட்டுக்கொண்டு

நூலைப் பாடி முடிக்கின்றார்.

அம்புலியும் அழகனும்:

அழகு என்றாலே முருகன் என்பதுதான் பொருள், மணம், இளமை, கடவுள்தன்மை என்ற தன்மைகள் நிறைந்த ஒரு பொருளே முருகன் என்ற செம்பொருள். பிள்ளைத் தமிழ் நூல்

களில் அம்புலிப் பருவம் பாடுவது மிகவும் கடினம் என்பர் புலவர்.

'பேசும் உலாவில் பெதும்பை புலி
பிள்ளைத் தமிழில் அம்புலி புலி' என்பது தமிழ்

வழக்கு. ஆனால் சொல்விற்பனமும், அவதானமும், கல்வி சொல்லவல்ல நல்வித்தையும் தந்து அடிமைகொண்ட கலைமகளின் அருளைப்பெற்ற அடிகள் வெகு உயர்வான முறையிலே இப்பருவத்தைபாடிப் புனைந்துள்ளார்.

அம்புலிக்கும் அழகனுக்கும் ஒப்பின்மை தான் உண்டேதவிர எவ்விதத்திலும் ஒப்புகிடையாது. அப்படி யிருந்தும் குழந்தை முருகன் உன்னை வேண்டி ஒரு விரல் சுட்டி அழுகிறான். உன் தன்மைகள்தான் என்ன? புறவிருளைப் போக்குவாயே யன்றி அகவிருளைப் போக்கும் உபாயமறியாய்! செங்குமுதங்களை மலர்த்த இயலுமேயன்றி உளத்திரு மலர் திறக்க ஒல்லாய்! சகோரப் புள்ளன்றி மற்றவை திளைத்தின்பமாரச் செய்யாய். அப்படியிருந்தும் உன்னைப் பொருளென மதித்து, ஆயிரம் மறைக்கும் ஒருபொருளாயிருப்பவன் அழைக்கிறான்.

நீ அவன் விரும்பிய வண்ணம் வந்தால் உனது கயரோகமும், முயற்கறையும் கூட சித்தாமிர்த தீர்த்தத் துளியால் நீங்கி விடும் என்றெல்லாம் கூறி அழகனுடன் அம்புலி ஆடவா என்று பாடுகிறார்,

நளினத் தோட்டில்:

சோணாட்டின் செழிப்பு சேறுநிறைந்த வயல்களாலும், செவ்வாம்பல் மலர்ந்த குளங்களாலுமே நன்கு வெளிப்படும். கம்பர் காட்டும் வளம் நிறைந்த மருதநிலக் காட்சி இங்கு நினைவுக்கு வருகிறது.

சிவந்த கால்களை உடைய அன்னம் கயலைஒத்த கண்களை உடைய கன்னியர்போல நடைபயின்று கொண்டிருக்கிறது, அன்னத்தின் மழலைப்பிள்ளை நளினத் தொட்டிலில் கண்வளருகின்றது. அந்திநேரம்-பசுங் கொடிகளை அருந்தவந்த எருமையின் கால்கள் வகையாகச்சேற்றில் மாட்டிக்கொண்டன. கன்றை நினைந்து எருமை கனைக்க கனம் நிறைந்த மடியிலிருந்து அருவி

யெனப்பால் இழிகின்றது. பசியால் சோர்ந்திருந்த அன்னக் குஞ்சு பாலை உண்டு மீண்டும் கண்வளர, பச்சைத்தேரைத் தாலாட்டுகின்ற மருதநிலம்-இது கம்பரின் கற்பனை யல்ல-உண்மை நவிற்சியே யாகும்.

'சேலுண்ட வொண்கணாரிற் றிரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளைக்
காலுண்ட சேற்று மேதிக் கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரை தாலாட்டும், பண்ணை'

அதுபோல சரவணப் போய்கையிலே மலர்ந்த தாமரை மலர் மேலே குழந்தை கார்த்திகேயன் கைத்தாயர் பாலுண்டு படுத்திருக்கிறான். பால்குடித்துப் பசி நீங்கியதும் அவர்களின் நகை வாண் முகத்தும் மார்பகத்தும் குறுமென் கால்களால் குருதி பொங்க உதைத்துக் குறும்பு செய்கிறான். மயில்மேலோனின் மென்கால்கள் நோகுமே என்ற எண்ணத்தில் பெண்கள் சிறு கோல் கொண்டு ஓச்ச, குமரன் தனது பெருந்தகைமையை நினைந்தவன் போல புன்னகை செய்கிறான். அந்தப் பவள வாயினால் முத்தம்தா என்று தாயாகி நின்று கேட்கிறார் தமிழ்ப்புலவர்,

நறவு விரிந்த விரைத் தோட்டு
  நளினத் தொட்டில் தடமுலைப்பால்
 நல்கி வளர்த்த கைத்தாயார்
  நகைவான் முகத்தும் மார்பகத்தும்
குறுமென் னடைய சிறுபசுங் காற்
  குருதி ததும்ப வுதைந்து சில
 குறும்பு செயத்தா ணுமென மென்
  கோல் கொண் டோச்சப் பெரும்புவனம்
நிறுவு மொருநின் பெருந் தன்மை
  நினைந்தாய் போலக் கனிந்தமுது
 நெக்குப் பசுந்தே னசும்பூற
  நெடு வெண் ணிலவு விரிந்தகுறு
முறுவ லரும்பும் செங்கனிவாய்
  முத்தந் தருக முத்தமே
 மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
  முருகா முத்தந் தருகவே.

சமயக் கருத்து:

இலக்கிய நயம், கற்பனைச் சிறப்பு இவற்றுடன் சமயக் கருத்துக்களும் ஆங்காங்கே காணப்படுவது நூலின் சிறப்புக்கு

மற்ெறாரு காரணமாகும். வள்ளைக் கொடி போன்ற காதுகளில் குழைகள் அசைய நடக்கின்ற மகளிர் கூந்தலிலிருந்து எழும் வண்டொலிக்கு அஞ்சி வாளைமீன் ஆகாயத்தின் கருநீலப் பரப்பைக் கடல் என எண்ணி அதில் விழத்தாவியது. ஆனால் அது உண்மையில் கடலல்லவே, ஆயினும் தாவிய வாளை தரையில் விழவில்லை. தற்செயலாக ஆகாய கங்கையில் விழுந்து மகிழ்ந்ததாம். இந்நிகழ்ச்சி உள்ளத்தால் பிறிதொரு தெய்வத்தை மெய்யாக் கொண்டு தொழுபவர்களுக்கும் தெய்வம் உறுதிப்பயன் கிடைக்க வழி செய்கிறது என்பதைக் காட்டுகிறது.

'உள்ளக் கருத்தால் பிறி தொன்றை
உண்மைப் பொருளென் றுள்ளவுந்தம்
உணர்விற் றெய்வங் கடைகூட்ட
உறுதி கிடைத்த படிபோலும்'

என்று பேருண்மைப் பொருளையும் வெகு எளிய உவமைக் காட்சி மூலம் அறிவுறுத்துகிறார்.

மும்முரசதிரும் காவிரிநாடன்:

பொன்கொழிக்கும் பொன்னி வளநாட்டில் வடகலையொடு தென்கலையும் பயின்றகவிவாணர்கள் ஓடிவர 'வம்மின்' 'வம்மின்' எனக் கொடை முரசு முழங்குகிறது, பொன்னுலகீந்த அத்தி மகளை மணம்புரியும் அழகனின் திருக் கல்யாணக் காட்சியைப் பறைசாற்றும் மணமுரசு, தெம்முனை சாயச் சமர்செய்து, செங்கள வேள்வி செய்கையிலே ஒலிக்கும் வெற்றிமுரசு. ஆகிய மும்முரச திரும் காவிரிநாடா முழக்குக சிறுபறை என்று நவிலுகின்றார்.

இருமாதர் புடை சூழும் திருக்கோலம்:

வேல்விழியாள் வள்ளியை மணங்கொள்ள வேங்கையாகவும் மாறினன் வேலவன். திருமணத்தின் பின்னும் அவள்பால் கொண்ட காதல் மாறவில்லை. குறத்தியானாலும் அவளின் குற்றேவலைச் செய்யத் தயாராகிவிட்டான் குமரன். 'நுண்ணிடைப் பெண்கள் கடைக்கண் பணியிலே, நூற்றிரண்டு மலைகளைச் சாடலாம்' என்பது மனிதருக்கு மட்டுமே என்பதல்ல. இதனை இங்கே புரிந்து கொள்ளலாம்.

கூனேறு மதிநுதல் தெய்வக் குறப் பெண்
குறிப்பறிந்து அருகணைந் துன்
குற்றேவல் செய்ய கடைக்கண் பணிக்கென
குறையிரந்து அவள் தொண்டை வாய்த்
தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்.

குறப்பெண்ணிடந்தான் இந்நிலை என்றால் குஞ்சரியிடத்தில்-தழைக்கும் பெருங்காதல் வெள்ளம் திளைப்பவனாகவே காண்கிறோம்.

குழைக்குந் தடக்கைத் திருத்தாதை நீரொடு
கொடுப்பக் குடங்கை யேற்றுக்
கொழுமலர் மணங்கமழ் மணப்பந்தர் நிற்பவக்
கொம்புமின் கொடியி னெல்கி
இழைக்கும் பசும்பொற் றசும்பென வசும்புபொன்
னிளமுலை முகங்கோட்டி நின்
றெய்யாமை நோக்கும் படைக்கட் கடைக்கணேக்
கின்னமுத மூற்ற வின்பம்
தழைக்கும் பெருங்காதல் வெள்ளந் திளைத்தவன்'

இருமாதர் புடைசூழ்ந்தருளும் திருக்கோலத்தைச் சிறப்பாகக் கிருத்திகை தோறும் வேளூரிலே கண்டு கண்பெற்ற பயனை, அடையலாம்.

தையல் தந்த செல்வன்:

அம்மை தன் குழந்தையை மடித்தலத்தில் இருத்திக் கொண்டு, மழலைவாயின் முத்தம் கொண்டு, உச்சி முகர்ந்து தனது கண்ணில் தன் கண்மணியின் திருவுருவைக் காட்டி விளையாடுகிறாள், அம்மையும் அப்பனுமாகச் சீராட்டி விளையாடும் பேறு இந்த சேனாபதிக் கடவுளுக் கன்றே கிடைத்தது. ஆனேறுயர்த்திட்ட ஐயற்கும் அம்மைக்கும் அருமருந்தாகி நின்ற ஆதிப்பிரானை' மெய்கண்ட தெய்வம் இத் தெய்வமல்லால் புவியில் வேறில்லை என்றுணர்ந்து. அஞ்சொற் றமிழ்ப் புலவோர் புகழ் வேளூரரசனைப் பணிந்தெழுவோம்.

சேலேறிய வயல் வேளூரரனடி வாழ்த்துவோம்.

சஹஸ்ராகமம்

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 23, இதழ் 2, பக்கம் 103 இன் தொடர்ச்சி)

पीठात शक्ति समावाह्य वर्धन्यांतु सुयोजयेत् ।
अनन्तादींश्च पूर्वादि तत्तत् कुंभे सुयोजयेत् ॥ 276

இதுபோல் பீடத்தினின்றும் சத்தியை ஆகர்ஷணம் செய்து வர்த்தனி கும்பத்தில் சேர்க்கவேண்டும், இவ்வாறு அனந்தன், சூக்ஷ்மன், சிவோத்தமன், ஏகநேத்திரன், ஏகருத்ரன், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டன், சிகண்டி என்ற எட்டு வித்யேச்வர மூர்த்திகளையும் சிவகும்பத்தைச் சுற்றிலுமுள்ள எட்டுக் கும்பங்களில் சம்யோசனம் செய்யவேண்டும். அதாவது ஆகர்ஷணம் செய்து ஆவாஹனம் செய்யவேண்டும்.

गन्धपुष्पैस्समभ्यर्च्य नैवेद्यादि प्रकल्पयेत् ।
यात्रा होमं ततः कृत्वा कुण्डे वा स्थण्डिलोपरि ॥ 277

पूर्वोक्तविधिना चैव होमं कुर्याद्विचक्षणः ।
पुष्पेणादाय तन्मूर्त्ति शिवकुम्भेसुयोजयेत् ॥ 278

இவ்வாறு ஆவாஹனம் செய்தபிறகு, சந்தனம் சாத்தி, புஷ்பத்தினல் அலங்கரித்து பழம், தாம்பூலம், நாளிகேரத்துடன், நல்ல பக்வமான அன்ன நிவேதனம் செய்து கற்பூரம் முதலிய உபசாரம் செய்து ஜபசமர்ப்பணம் செய்துகொண்டு, யாத்ரா ஹோமம் செய்யவேண்டும். அந்த யாத்ரா ஹோமத்தை சுவாமி யின் எதிரில் அமைக்கப்பட்ட குண்டத்திலோ ஸ்தண்டிலத்திலோ ஹோமம் செய்யலாம், (குண்டம் என்பது மூன்று மேகலைகளுடன் ஒருமுழ சதுரம் ஆழம் உள்ளதாய் கட்டப்பட்டதாய், உள் நடுவில் கமலத்துடன் வெளியில் மேகலையில், அரசிலைபோன்ற நாபி யுடன் கூடியது.) ஸ்தண்டிலம் என்பது பூமியில் ஒருமுழ சதுர மாக மணலையோ உமியையோ பரப்பி அதன்மேல் முறைப்படி

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தின்
பத்தாவதாண்டு நிறைவு விழாவில்

சென்னை சட்டமன்ற சபாநாயகர் கனம். S. செல்லபாண்டியன் B. A., B. L.,
அவர்கள் தலைமையில், சென்னை மாநில செய்தித்துறை அமைச்சர்
கனம் G. புவராகன் B. Sc. (Hons). அவர்கள் [illegible]

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில்



சென்னை முன்னாள் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவர்
திரு. வீ. இரத்தினமுதலியார் B. A., B. L., அவர்கள் தலைமையில்
திரு. முருக. கிருபானந்தவாரியார் அவர்கள் திருவெம்பாவை - திருப்பாவை
மாநாட்டைத் தொடங்கிவைத்து உரையாற்றுதல்.

ஹோமம் செய்வது. இதனுள் ஏதாவதொன்றில் விதிமுறை வழுவாது குண்டசம்ஸ்காரம் சுருக் சுருவ ஸம்ஸ்காரம் ஆஜ்ய சம்ஸ்காரம் முதலியவைகளுடன் புத்திமானுன ஆசாரியன் ஹோமம் செய்து பூர்ணுகுதி முதலியன முடித்து அக்னியில் ஆவாஹனம் செய்யப்பட்ட மூர்த்தியை கையிலுள்ள புஷ்பத்தின் மூலமாக ஆகர்ஷித்து கும்பத்தில் சேர்க்கவேண்டும்.

यात्रादानं ददेत्पश्चात् ग्रहप्रीतिंच्च दापयेत् ।
परिचारक माहूय दीक्षितं विनयान्वितम् ॥ 279

वस्त्रेणाच्छादितशिरं गन्धाद्यै स्संविभूष्य च ।
वाहयित्वा ततश्शंभु कुम्भं क्षौमाद्यलंकृतम् ॥ 280

உடனே கும்பங்களை யாகசாலைக்கு எழுந்தருளச் செய்ய வேண்டியதன் பொருட்டு, யாத்ராதானத்துடன் கிரஹப்ரீதி தானமும் செய்யவேண்டும். பிறகு தீக்ஷை பெற்றவனும் வினய சீலனுமுள்ள பரிசாரகனை அழைத்து அவருக்குச் சந்தனம் புஷ்பம் இவைகளால் அலங்கரித்து சிரசில் வஸ்திரத்தினல் சுற்றிக்கட்டி முன்னமே பட்டாடைகளால் அலங்காரம் செய்து வைக்கப்பட்டிருக்கும் சிவகும்பத்தை எடுத்துக்கொள்ளும்படி செய்யவேண்டும்.

विद्येश कुम्भानादाय दीक्षितैर्वाहयेत्क्रमात् ।
आचार्योस्त्रं समुच्चार्य कुशैस्संस्पर्शयेत् घटम् ॥ 281

மற்றுமுள்ள வித்யேச கும்பங்களை தீக்ஷிதர்களைக்கொண்டு எடுத்துவரச்செய்து ஆசாரியன் தர்ப்பமுஷ்டியினல் சிவ கும்பத்தைத் தொட்டுக்கொண்டு அஸ்திர மந்திரத்தை ஜபம் செய்துகொண்டு வரவேண்டும்.

स्वस्ति घोषैस्समायुक्तं दीपज्वाला समन्वितम् ।
छत्र चामर वृन्दैश्च सर्वातोद्य समन्वितम् ॥ 282

शालां गत्वाऽथ देवेशं वेदिकोपरिमध्यमे ।
पश्चिमाभिमुखं स्थाप्य सावधानेन बुद्धिमान् ॥ 283

மங்களகரமான வேத கோஷங்கள் ஒலிக்க தீவர்த்திகள் ஜ்வலிக்க, குடை சாமரம் முதலிய விருதுகள் விளங்க, சகல வாத்தியங்களும் முழங்க, யாகசாலைக்கு அழைத்துச்சென்று வாயி

லில் புஷ்பாஞ்சலிசெய்து வேதிகையின் நடுவில், மேற்குமுகமாக மிகவும் ஜாக்கிரதையுடன் ஸ்தாபனம் செய்யவேண்டும்.

देवस्य वामपार्श्वे तु वर्धनीं विन्यसेत्बुधः ।
पूर्वाद्याशासु विद्येशान् प्रथनाभि मुखान्न्यसेत् ॥ 284

சிவகும்பத்தினுடைய இடதுபாகத்தில் வர்த்தனி கும்பத்தையும் சிவகும்பத்தைச் சுற்றி கிழக்கு முதலிய திக்குகளில் அநந்தன் முதலிய வித்யேச்வரர்கள் எண்மரையும் ஸ்தாபிக்கவேண்டும். இவ்வாறு ஸ்தாபனம் செய்யப்பட்ட வித்யேச்வரர்கள் சிவ கும்பத்திலிருக்கும் இறைவனுக்கு அபிமுகமுள்ளவர்களாக இருக்கும்படி செய்யவேண்டும்.

बंन्धनेतु प्रतिष्ठाया मुत्सवे प्रोक्षणे तथा ।
पश्चिम द्वार संयुक्तं शालां च परिकल्पयेत् ॥ 285

அஷ்டபந்தனம் செய்யும் காலத்திலும், ஆவர்த்தனம் முதலிய பிரதிஷ்டைகளிலும் உத்ஸவத்திலும், சம்புரோக்ஷணையிலும் அமைக்கப்படும் யாகசாலையானது மேற்குமுகம் நோக்கியதாக இருக்கவேண்டும்.

यस्यांदिशि भवेद्वारं तां प्राचीं परिकल्पयेत् ।
तद्वाराभिमुखं वक्त्र मूर्ध्वंचाभिमुखं स्मृतम् ॥ 286

வாயிற்படியானது எந்த திக்கில் இருக்கிறதோ அந்த திக்கை கிழக்கு திக்காக அமைத்துக்கொள்ளவேண்டும். அந்த திக்கை நோக்கி இறைவனின் தத்புருஷ வக்த்ரம் இருப்பதாகவும் ஊர்த்துவக்த்ரமும், அதை அனுசரித்து அந்த துவாரத்திற்கு அபிமுகமாக விருப்பதாகவும் பாவிக்கவேண்டும்.

यागेशं च शिवाग्निं च स्थापयेत्पश्चिमाननम् ।
मखालये च कुम्भस्य कथं स्यात्पश्चिमाननम् ॥ 287

யாக ரக்ஷகரான யாகேச கும்பத்தையும் இதுபோல சிவாக்னியையும், மேற்குமுகம் நோக்கியதாக ஸ்தாபிக்கவேண்டும். யாகசாலையில் சிவகும்பத்திற்கு எவ்வாறு மேற்குத்திசை நோக்கிய முகம் உண்டாகும் எனில் கேளுங்கள். அதாவது,

नित्यद्वारस्य पूजां च वृषकुंभस्य पश्चिमे ।
यद्वक्त्रं द्वारसंबन्धे पुरुषं तद्विभावयेत् ॥ 288

யாகசாலேயின் ஆவரண பூஜாக்ரமத்தில் பூஜிக்கப்படும் விருஷப கும்பத்திற்கு மேல்புரத்தில் நித்யத்வாரபூஜை செய்ய வேண்டும் ஆகவே த்வாரத்திற்கு அபிமுகமாக எந்த முகம் காணப்படுகிறதோ அந்த முகம் தத்புருஷமுகமாக ஆகும். ஆசாரியன் அந்த முகத்தை தத்புருஷமுகமாக நினைக்கவேண்டும்.

आचार्यस्सकलीकृत्यस्थिरमासनमर्चयेत् ।
आसनाद्यर्चनादीनि प्राग्वच्च परिकल्पयेत् ॥ 289

இவ்வாறு பாவித்து ஆசாரியன் ஸகளீகரணம் செய்து கொண்டு சக்தியாதி சக்திபர்யந்தமான ஸ்திராசன பூஜைசெய்து ஆஸனம் முதலிய பூஜைகளை முன்போல் செய்யவேண்டும்.

धूपदीपादिना पूज्य ततो भोगांग मर्चयेत् ।
ईशानं नैरृते देशे पश्चिमेपुरुषं तथा ॥ 290

अघोरमुत्तरेदेशे वामं दक्षिणदेशके ।
पूर्वदेशेतु सद्यं च त्वर्चयद्देशिकोत्तमः ॥ 291

பூஜை செய்தபிறகு தூபம் தீபம் முதலிய உபசாரங்களைச் செய்து போகாங்க பூஜையைச் செய்யவேணடும், தென்மேற்கில் ஈசானத்தையும், மேற்கில் தத்புருஷத்தையும், வடக்கில் அகோரத்தையும், தெற்கில் வாமதேவத்தையும், கிழக்கில் ஸத்யோஜாதத்தையும், அர்ச்சிக்கவேண்டும்.

हृदयं वायुदेशेतु शिरो वै नैरृते तथा ।
शिखामीशान दिग्भागे कवचं पावके यजेत् ॥ 292

ईशान पश्चिमेऽस्त्रं च नयनं यक्षपूर्वके ।
एव मेवं समभ्यर्च्य धूपदीप समन्वितम ॥ 293

இவ்வாறு வடமேற்கில் ஹ்ருதயத்தையும், தென்மேற்கில் சிரசையும், வடகிழக்கில் சிகையையும், தென்கிழக்கில் கவசத்தையும், வடகிழக்கிற்கும் வடக்குக்கும் இடையில் அஸ்திரத்தையும், தென்மேற்கிற்கும் தெற்கிற்கும் இடையில் நேத்திரத்தையும் பூஜித்து தூபம் தீபம் முதலிய உபசாரங்களைக் கொடுக்க வேண்டும்.

[தொடரும்]

சிவவழிபாடும் சங்க நூல்களும்

செஞ்சொற்கொண்டல்

வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம்.ஏ.

சிவவழிபாட்டின் பழமை:

சங்ககாலத்தும் அதற்கு முன்னும் வாழ்ந்த தமிழர்களது முதல் வழிபாடென்று கருதத்தக்கது சிவவழிபாடேயாகும். முழு முதற் கடவுளாகச் சிவபெருமானைக் கொண்டு வழிபட்டனர் பழந்தமிழ் மக்கள்.

"ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றேனும்"

எனத் தொடங்கி (புறம் 56) உலகத்தைக் காக்கும் அருள் ஆற்றலை உடைய தோலாத நல்லிசையை உடையவர் நாற்பெருங்கடவுளர் என்று நக்கீரனர் பாடுமிடம் போல்வனவற்றிலெல்லாம் பெருந் தேவனுகிய சிவபிரானுக்கே முதலிடம் தந்து பேசியுள்ளனர் நம் பழந்தமிழ்ப் பாவலர்கள்.

"நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈருக"

என்ற சீத்தலைச் சாத்தனர் செம்மொழியை நோக்கினும் இஃது உறுதிப்படுத்தலைக் காணலாம். முக்கண்ணை உடைய சிவபெருமான் முதலாகக் கூறப்பட்ட அனைத்துக் கடவுளர்க்கும் திருக்கோயில்கள் இருந்தன. அன்றியும், *மொகஞ்சோதாரா வில் சிவவழிபாடு இருந்தது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. அமெரிக்கா. கிரேக் முதலிய நாடுகளிலும் இவ்வழிபாடு பரவியிருந்தது. கி. மு. 1500ல் வாழ்ந்த மோஸஸ் கடவுள்

---

* தமிழர் சரித்திரம் ந. சி. கந்தையாப் பிள்ளை-பக் 114.

These events occured on the 6-th day of the third month Sivan (Analysis of Scripture History P 77).

அருளிய பத்துக் கட்டளைகளை சிவன் மாதத்தில் ஆறும்நாள் வெளியிட்டான் என்று சொல்லப்படுகிறது. எகிப்து தேயத்தை யடுத்த பகுதிகளிலும் சிவவழிபாடு இருந்தது என்பதற்கு இத னினும் வேறு சான்று வேண்டுமோ? அமெரிக்காவில் கொல ராடோ ஆற்றோரத்துப் பீடபூமியில் ஒரு சிவாலயம் கண்டுபிடிக் கப்பட்டிருக்கிறது. அந்த நிலப்பகுதி மற்ற உலகப் பகுதியுடன் துண்டிக்கப்பட்டு இலட்சக்கணக்கான ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டுமென ஆராய்ச்சி அறிஞர் கூறுவர். சமநிலையில் ஓடிக் கொண்டிருந்த அந்த ஆறு, ஏழாயிரம் அடி ஆழத்துக்கு நிலத்தை அரித்துச்சென்றிருக்கிறது. இவ்வாறு செல்ல 10,0000 ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டுமென நில நூலார் கூறுகின் றனர். இக்கோயிற்குப் பக்கத்திலுள்ள பல இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இக்கோயில் அரைச் சதுரக்கல் சதுரமான தும் செங்குத்தானதுமான ஒரு மலையில் உள்ளது என்பர். இங்குத் தீத்தட்டிக் கற்களாற்செய்த அம்புத்தலைகள் காணப் பட்டனவாம். இத்தகு தொன்மையுடைய சிவவழிபாடு நம் சங்க நூல்களிற் காணப்படுவதில் வியப்பில்லை.

சிவவழிபாட்டின் சிறப்பு:

சிவவழிபாடே ஏனைய வழிபாடுகள் எல்லாவற்றினும் சிறந் தது ஆகும். இவ்வழிபாடு, உலக வழிபாடுகளில் சிறப்புடைய தென்பதனை அனைவரும் உணர்வர். "அன்பே சிவம்" என்ற கருத்தை உடைய தமிழ்ப் பெருமக்கள் இச்சிறப்புடைய சிவவழி பாட்டால் பின்னும் சிறப்புடையவர் ஆயினர். சங்க நூல்களில் இவ்வழிபாடு காணப்படுவதாயின் அதற்கு முன் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் இது இந்நாட்டில் வேர் ஊன்றி யிருக்கவேண்டுமல்லவா? தம் திருவாசகப் பதிப்பில் போப்பையர் கூறியுள்ள பகுதிகளை நோக்க அயலவரும் இச்சமயத்தின் அரு மையை எவ்வாறு போற்றியுள்ளனர் என்று தெளியலாம்; "இந் தியப்பெரு நாட்டில் உள்ள மதங்கள் அனைத்தினுள்ளும் சைவ சித்தாந்த சமயம் மேலானது. இது குறிப்பாகத் தென்னிந்தியா விற்கே-தமிழர்க்கே உரியது. தமிழ் மக்களின் பெருமையை அறிய விழையும் ஒவ்வொருவரும் அச்சமய நெறி நிற்றல்வேண் டும். ஆரியர்களுக்கு முற்பட்டது சைவசமயம். ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் பதிந்த சமயம் இது. கடவுள், உலகு, உயிர், வினை முதலியவற்றின் உண்மைகளை விளக்கும் நூல்கள்

ஆங்கிலத்தில் இதுவரை வெளிவரவில்லை. அவை தமிழில்மட்டுமே உள்ளன." என்கிறார் அப்பெரியார்.[1]

கற்கால முதலே மனித வாழ்வைக் கணித்துவரும் அறிவியல் வல்லுநர்கள் மனிதன் கருவிகள் செய்வதோடு, உடுப்பதோடு உரையாற்றுவதோடு ஒரு கொள்கை அல்லது சமயத்தைப் பின்பற்றும் திறல் உடையவனாக உள்ளான் என்று கூறுவதும் இங்கு நினைக்கத்தக்கதாகும்.[2] இவ்வாறு வாழும் நிலையில் தமிழன் கொண்டொழுகிய தொல்பெருஞ் சமயமாகவே சைவம் உள்ளது. இவ்வாறு கூறினும், இன்று நாம் காணும் நிலையில் உள்ள இச் சமயத்திற்கும் பண்டு நம் சங்ககாலத் தமிழர் கொண்டொழுகிய சமயத்திற்கும் வேறுபாடுகள் பெரிதே உள்ளன. இன்று ஆகம நிலையில் வளரும் இந்துமதமே மக்களால் பின்பற்றப்பட்டு வருவது எனவும், வேதத்தினை யொத்து நிலவுவதன்று என்றும் தமிழர் வரலாறு எழுதிய திரு பி. டி. சீனிவாச ஐயங்கார் அவர்கள் கருதுகின்றார்கள்.[3]

சங்க நூல்களிற் கூறப்பெறும் சிவவழிபாடு தமிழ் மக்களுக்கே உரியது. தொல் பெருஞ் சமயமாக உள்ள இப்பெருஞ்சமய

---

[1] "The Saiva siddhanta system is the most elaborate influential and most intrinsically valuable and undoubtedly valuable of all religions of India. It is Peculiarly the South Indian and Tamil religion; and must be studied by every one who hopes to understand the influence of the great souls - Indian People :- Saivism is the old Pre - historical religion to south India, essentially existing from Pre - Aryan times, and holds sway over the hearts of Tamil People. But this great attempt to solve the Problems of God, and soul, humanity nature, evil suffering, and the unseen world, has never been expounded in English. The text books exist in Tamil only." — Dr. G. U. Pope.

[2] Man is not only a tool-making, cooking, clothing and talking animal, but also a religious animal.

—History of the Tamils - P. T. Srinivasa Iyengar-P. 74

[3] History of the Tamils - P. 103.

உண்மைகளைத் தமிழ் மக்கள் அறிந்து ஒழுகினர் என்பதற்குப்பல சான்றுகள் உள்ளன. அவற்றை ஆராய்ந்து நிறுவுதலே நம் சிந்தனையாகும்.

முப்பொருள் உண்மையும் தொல்காப்பியமும்:

சைவம் சிவபிரானைப் பரம்பொருளாகக் கொண்டது. அச் சிவபிரானை அடைய உயிர்கள் முயலவேண்டும். ஆயின் அவ்வாறு அடைவதற்குத் தடையாக உள்ளவை பல. அத்தடைகளை யறுத்து விடுதலை பெற்று உயிர் இறைவனைக் காண்டலும் இன்புறலும் வேண்டும். இறைவன், உலகு, உயிர்கள் என்ற இம் முப்பொருள்கள் என்றும் அழியாதவை. இறைவன் ஒருவன். அருள்பெற்று உய்யும் உயிர்கள் பல. இவ்வுலகம் ஐம்பெரும் பூதங்களினால் ஆகியது: இவ்வுண்மைகளைத் தமிழ்மக்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே அறிந்திருந்தனர். அறிந்திருந்ததோடு நன்கு எண்ணியும் வந்தனர். அவ்வெண்ணங்களைச் சங்ககாலப் பாவலர்க்கு முன்பேயே வாழ்ந்தவராகக் கருதப்படும் தொல்காப்பியர் கூறியுள்ளார். கி. மு. 5-ம் நூற்றுண்டில் வாழ்ந்தவரென்று இப்பெருந்தகையின் காலத்தை அறுதியிட்டுரைப்பர் டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனுர் அவர்கள்.

> "வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
> முனைவன் கண்டது முதனூலாகும்,,

என்றவிடத்து இறைவன் பேசப்படுகின்றான்.

> "நிலந்தீ நீர்வளி விசும்போடைந்தும்
> கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"

என்புழி உலகியல்பு பேசப்படுகின்றது. தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டு வாழ்ந்த பாவலர்கள் பாடிய சங்க நூல்களிலும் இக்கருத்துக்களைக் காண்கின்றோம். 'முதற்கண் சிவபிரானைக் குறித்துச் சங்க நூல்களிற் காண்பவற்றைச் சிந்திப்போம்.

சிவபிரான் திருவுருவத்திருமேனி:

புறநானூற்றில் கடவுள் வாழ்த்துப்பாடல் சிவபிரானைப் பற்றியதாக உள்ளது. அதன்கண் சிவபிரானது திருவுருவத் திருமேனி நன்கு தெளிவாக்கப்பட்டிருக்கிறது. சிவபிரான் தலையிற்சூடிய கண்ணி கொன்றை; திருமார்பிற் சூடிய மாலையும் கொன்றை; ஊர்வது ஆனேறு; கொடியும் ஆனேற்றுக்கொடி. திருநீலகண்டம் அழகுக்கு அழகாக விளங்குகின்றது. அது

மறைநவில் அந்தணர்களால் தொழப்படும். ஒரு கூற்றில் பெண்மை உடையவன்; அதனைத் தன்னுளடக்கிக்கொண்டு சிவமாகவும் நிற்பன். திருமுடியிற் சூடிய பிறை பதினெண் குலத்தாரானும் ஏத்தப்படும். இப் பெருமான் எல்லாவுயிர்க்கும் இன்பமாக உள்ளவன்; நீர்க்கரகம் உடையோனுய், அருந்தவத் தோனுய் விளங்கும் அண்ணல்.' இது பாரதம் பாடிய பெருந் தேவனுரின் பாட்டோவியம்.*

'கார்காலத்தே மலர்ந்து விரிந்த கொன்றைத் தாரினன்; மாலையினன்; கண்ணியினன்; நெற்றிக்கண் உடைய பிரான்; கையிற் கணிச்சிப் படையும் மழுவும் உடையவன்; முத்தலை வேல் பிடித்தவன். ஆனேறு ஊர்வோன்; அம்மையைச் சேர்வோன்; சிவந்த வானம் போன்ற மேனி; பிறையன்ன எயிறு; எரிபோன்ற செஞ்சடை; பிறை ஒளிரும் சென்னி; புலித்தோலாடை; மறை யிசை பாடும் திருமிடற்றினன். அச் சிவபிரானது சேவடிக்கீழ் இவ்வுலகம் தங்கிற்று' - என்பது இப்புலவர் பெருமான் அக நானூற்றில் தருகின்ற உயிரோவியம்.' (தொடரும்)

---

* புறம் - 1.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

Highly impressed about the maintenance of the temple with sanctity and nearly maintained. The temple officials are courteous.

(Sd.) T. R. Singaravelu

12-1-64. Sub Magistrate, Tiruvarur.

One forget oneself from the moment one enters into the holy precincts of this hallowed temple. The administration deserves all praise for the excellent way in which pilgrims are treated and attended to. It is only here that one feels that those in charge of the actual administration are also considering themselves always at the feet of the Lord and it is with this they appear to devote themselves to the task. May the Almighty bless them all.

(Sd) S. Natarajan,

17-1-64. Presidency Magistrate, Madras.

தொல்காப்பியச் சொல்லதிகார - - - விளக்கக் கட்டுரைகள்.

பண்டித வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி

(மலர் 23, இதழ் 2, பக்கம் 122 இன் தொடர்ச்சி)

(இ) வேற்றுமை உருபுகளை எதிர்மறுத்து மொழியினும் தன் பொருள் நிலையில் திரியாவாம். (24)

உருபுகள் உடன்பாட்டுச் சொல்லில் வரும்பொழுதே தம் பொருளை இனிது விளக்கும்; அங்ஙனமன்றி எதிர்மறைச் சொல்லில் வரும்பொழுது தம் பொருள் இனிது விளக்கா. ஆயினும் வழு அமைதியாகக் கொள்க என்பதாம்.

(ஈ) உருபுகள் செய்யுட்கண் திரியுமாறு :

உயர்திணை, அஃறிணை ஆகிய இருபெயர்க்கண்ணும் 'ஆன்' என்னும் உருபு 'அகர'மாகத் திரிந்து வரும், 'குவ்வும்' 'ஐயும்' ஆகிய உருபுகள் உயர்திணைக்கண் மட்டுமே 'அகர'மாகத் திரிந்து வரும். இதனையே.

> " ஐயான்குச் செய்யுட் கவ்வு மாகும்
> ஆகா வஃறிணைக் கானல் லாதன " (பெய. 61)

என நன்னூலாரும் கூறுமாறு காண்க.

உருபுகள் திரிந்து வாராது தம்பொருள் உணர்த்தற்பாலன. அங்ஙனமன்றி செய்யுட்கண் திரிந்துவரினும் வழுவமைதியாகக் கொள்க என்பதாம். (25, 26)

7. பிறவும் இயைபுடையன :

(அ) வேற்றுமைப் பொருள்கள் தோன்றுதற்கு இடம் :

கூறப்பட்ட வேற்றுமை உருபு ஏழும் வினை, செய்வது, செயப்படு பொருள், நிலம், காலம், கருவி, இன்னதற்கு, இது பயன் என்னும் எட்டினையும் நிலைக்களனாகக் கொண்டு பிறக்கும்

என்பதாம். இவை காரியத்திற்கு முன்னிற்றலின் 'தொழில் முதனிலை' எனப்படும்.

இவ்வெட்டும் தொழிற்குக் காரணம் ஆமாறு; 'வனைந்தான்' என்றவழி, வனைதற்றொழிலும், வனைந்த கருத்தாவும், வனையப் பட்ட குடமும், வனைதற்கிடமாகிய நிலமும், அத்தொழில் நிகழுங் காலமும், அதற்குக் கருவியாகிய திகிரி முதலாயினவும், வனையப் பட்ட குடத்தைக் கொள்வானும், வனைந்ததனுடைய பயனுமாகிய எட்டும்பற்றி அத்தொழில் நிகழ்ந்தவாறு கண்டுகொள்க.

இவ்வெட்டின் நிலைக்களத்தும் வேற்றுமை பிறக்குமாறு: 'வனைந்தான்' என்பதன்கண் செய்வது எழுவாயாயும், வினையுஞ் செயப்படு பொருளும் இரண்டாவதாயும், வினைமுதலுங் கருவியும் மூன்றாவதாயும், ஒருவன் ஏற்றுக்கொண்ட வழி 'இன்னதற்கு இதுபயன்' நான்காவதாயும், நிலமுங் காலமும் ஏழாவதாயுஞ் சேர்ந்தன. இன்னும், வனைந்தவன் கொடுத்த குடம் அவன் கையினின்று நீங்குதல் ஐந்தாவதாயும், அதனை ஒருவன் ஏற்றுக் கொண்டவழி அஃது அவன் உடைமையாதல் ஆறாவதாயுஞ் சேருமாறும் உணர்க. கருவிக்கண் அடங்கும் ஏதுவும் ஐந்தாவ தற்கு வரும்.

இங்ஙனம் வேற்றுமைப் பொருள்களே வினைக்குக் காரண மாதலின், இவ்வேற்றுமைப் பொருளெல்லாம் வேற்றுமையியலிற் கூறப்பட்டமையால் இங்கு மீண்டும் கூறியது என்னை எனின்? அங்குக் கூறப்பட்டவற்றை இங்குத் தொகுத்துக் கூறியுள்ளார்; அன்றியும் வினையென்னும் காரணம் ஒன்று சேர்த்துள்ளார்; ஆதலால் இப்பாகுபாடு அங்குப் பெறப்படாது; அதனால் இங்குக் கூறினர் என்பது சேனாவரையர் கருத்து. (29)

காரியம் பிறத்தற்குக்காரணமாய இவ்வெட்டனுள், செயப்படு பொருளும், ஏற்பதும், பயனும் ஆகிய மூன்றும் குன்றினும் காரியம் பிறத்தற்கு இழுக்கு இல்லை என்பதாம். (30)

(ஆ) ஆகுபெயர் :

ஆகுபெயராவது யாதானுமொரு இயைபுபற்றி ஒன்றன் பெயர் ஒன்றற்கு ஆகி வருவதாம்.

"ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன வாகு பெயரே" (பெ 33)

என நன்னூலாரும் கூறுமாறு காண்க.

அது முதற்பொருளின் பெயர் சினைப் பெயர்க்காகும் முதலாகு பெயரும், சினைப்பொருளின்பெயர் முதற்பெயர்க்காகும் சினையாகு பெயரும், ஒரு இடத்தின் பெயர் அவ்விடத்தில் பிறந்த பொருளுக்காகும் இடவாகு பெயரும், பண்பின் பெயர் அப்பண்புடையதற்காகும் பண்பாகு பெயரும், ஒன்றற்கு முதற் காரணமான பெயர் அக்காரணத்தாலியன்ற காரியத்தைக் குறிக்கும் காரண ஆகுபெயரும், இருபெயரொட்டு ஆகுபெயரும், செய்தான் பெயர் (கருத்தா) அவனால் செய்யப்பட்டதன் மேல்வரும் கருத்தாவாகுபெயரும், ஒரு அளவையின் பெயர் அளக்கப்பட்ட பொருள்மேல் வருதலும், நிறுத்து எடையிடும் எண்ணின் பெயர் அந்நிறுக்கப்பட்ட பொருள்மேல் வருதலும், ஆகிய எண்ணலளவை யாகுபெயரும் எனப் பலவகைப்படும். (31, 33)

அவ்வாகு பெயர், தம்பொருளின் வேறல்லாத பொருளின் இயைந்து நின்று ஆகுபெயராதலும், தம் பொருளின் வேறான பிறபொருளின் இயைந்து நின்று ஆகுபெயராதலும் உண்டு. சினையாகுபெயர், முதலாகு பெயர் போல்வன முன்னையதற்கும், இடவாகுபெயர் போல்வன பின்னையதற்கும் உதாரணமாம். (32)

மேற் கூறப்பட்ட ஆகுபெயர்களே யன்றி பிறவாறு ஆகு பெயர்கள் வரினும் ஏற்றுக்கொள்க என்பதாம். (34)

[தொடரும்]

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

Visited the temple this morning. Had good dharsan and peace of mind. I am greateful to the temple staff for their courtesy and kindness. I pray to the Lord so that I may have health and peace of mind so that I may devote the rest of my life in His cause.

(Sd.) P. T. Rajan,
4—2—64.

சிவாலய தரிசனமுறை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்,

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

1. முறையுணர்வின் இன்றியமையாமை

சிவாலயத்தின் பெருமை :

இயல்பாகவே பாசங்களின் நீங்கி, இறைமைக் குணங்கள் எல்லாவற்றையும் இயல்பாகவே உடைய பதியாகிய சிவபெருமான், இயல்பாகவே பாசத்துள் அகப்பட்டுக் கிடக்கும் பசுக்களாகிய உயிர்கள் அப்பாசத்தினின்றும் நீங்கித் தன்னை அடையுமாறு திருவருள் செய்யத் திருமேனிகொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்நிலைத் தானங்களே சிவாலயங்கள். அதனால், தேவர்களும் ஆங்குக் குழுமி வந்து சிவபிரானை முறைப்படி தரிசித்து வேண்டியவற்றைப் பெற்றுச்செல்வர்.

உயர்ந்த பிறப்பினராகிய தேவர் முதல், தாழ்ந்த பிறப்பினவாகிய எறும்புகள் வரையில் உள்ள எல்லா உயிர்களுக்கும், அவற்றிற்கு உள்ள இன்னலை நீக்கி, அவைகள் வேண்டியவற்றை வேண்டியவாறே அளித்தற்பொருட்டுச் சிவபெருமான் தனது திருக்கோயிலில் அம்பிகையுடனும், விநாயகர் முருகர் முதலிய குமாரர்களுடனும், மற்றும் திருமால், பிரமன் முதலிய தேவர்களுடனும், நந்தி முதலிய பிரமத கணங்களுடனும், அடியார்களுடனும் இனிது வீற்றிருந்தருளுகின்றான்.

ஓர் அரசனது அத்தாணி மண்டபத்தில் அவனை நேரே அணுகி வேண்டியவற்றை விண்ணப்பித்துப்பெற விரும்புவோர், அங்குச் செல்லவேண்டிய முறையை நன்கறிந்து செல்லுதல் இன்றியமையாததுபோல விண்ணுளும் தேவர்க்கு மேலாய வேதியனாய், மண்ணுளும் மன்னவர்க்கு மாண்பாகி நிற்பவனாய், சர்வலோக நாயகனாய் உள்ள சிவபெருமானை, அவன் பல்கணங்களும் புடைசூழத் திருவோலக்கமாய் வீற்றிருந்தருளும் இடத்தில் அணுகி, வேண்டியவற்றை விண்ணப்பித்துப்பெற விரும்புவோரும் ஆங்குச் சென்று வழிபடும் முறையை அறிந்துகொள்ளுதல் இன்றியமையாததே.

ஐயம் அகற்றல் :

அரசனைப் போன்றவன்தானா, ஆண்டவன்? அவன் அருளுடையவன் அல்லனோ! எப்படிச் சென்று வழிபட்டால் என்ன? என்று சிலர் வினவலாம். ஆம்; அரசனைப் போன்றவன்தான் ஆண்டவன். அதனைப் பின்வரும் திருக்களிற்றுப்படிச் செய்யுள் நன்கு தெரிவிக்கின்றது:

"மன்னனருள் எவ்வண்ணம் மானிடர்பால் மாணவக
அன்னவகையே அரனருளும்"

இதனால் ஆண்டவனையும் மனிதரோடு சேர்த்து எண்ணி விடுதல் கூடாது. அரசனிடத்தில் இரு தன்மைகள் உள. ஒன்று அவனது தனிப்பட்ட தன்மை; அத்தன்மையில் அவன் மனிதன். அவ்வகையில் மனிதரிடத்தில் உள்ள குறைகள் அவனிடமும் இருக்கும். மற்றொன்று ஆட்சி நிலையில் உள்ள அரசன் என்னும் தன்மை. அது இறைவன் தன்மையோடு ஒத்ததே. நீதி தவறாத அரசனுக்கும், ஆண்டவனுக்கும் அதிக வேறுபாடில்லை. அரசனை, 'இறை' என்று வழங்கிய திருவள்ளுவர் முதலிய எல்லாப் பெரியோர்க்கும் இஃது உடன்பாடு. சிவபெருமானது அதிகார சத்திகள் பலவற்றுள் ஏற்பன அரசனிடத்தில் நின்று அரசாட்சியை நடத்துகின்றது என்பதே சைவத்தின் கொள்கை.

"அரசனும் செய்வது ஈசன் அருள்வழி"
"........மன்னிய வினைப்ப லன்கள்
தரும் அரன் தரணி யோடு தராபதி போல"

என்பன சிவஞான சித்தி (சூ. 2. 32, 4.)

"அனைவோர்க்கும் தெய்வம்-இலைமுகப் பைம்பூண் இறை" என்பது குமர குருபரர் வாக்கு (நீதிநெறி விளக்கம் 27,)

அரசனும் அருள் இல்லாதவன் அல்லன்; அருள் உடையவனே: ஆனால், அருள் இல்லாதவன் போலத் தவறு செய்தவரைத் தண்டித்தல் தன்பொருட்டன்று: தவறுசெய்தவர் திருந்துதற் பொருட்டும், நாட்டில் தவறு நிகழாதிருத்தற் பொருட்டுமேயாகும். அதுபோலவே ஆண்டவன் அருள் உடையவனாயினும், தவற்றுக்குத் தண்டனை தராது ஒழியான். தவறு செய்தவர் தம் தவற்றை உணர்ந்து, இனித் தவறு செய்யேன்; இதனைப் பொறுத்தருள் என்று வேண்டிக்கொண்டால், அரசனும் மன்னிப்பான். ஆனால், மன்னிக்கப் பெற்றவர்கள் பின்பு ஒருநாளும் தவறு செய்தல் கூடாது.

பழங்காலத்தில் அரசர் குடியிற் பிறந்தவர்கள் தமது ஆட்சியின் புனிதத்தன்மையை உணர்ந்து,

"ஒருமைந்தன் தன் குலத்துக்கு உள்ளான் என்பதும் உணரான்
தருமந்தன் வழிசெல்கை கடன் என்று தன்மைந்தன்
மருந்தன் தேராழி உற ஊர்ந்தான் மனுவேந்தன்"

என்றருளிய சேக்கிழார் திருமொழியின்படி (மனுநீதி கண்ட புராணம் 44.) முறையை முட்டாமற் செலுத்தி வந்தார்கள். அதனல், அவர்கள் குடிகள் தழைத்தோங்கின. பிற்காலத்தில் வந்தவர்கள் அப்புனிதத் தன்மையை மறந்து தங்கள் இச்சைப் படியே நடக்கத் தொடங்கினமையால், அக்குடிகள் வீழ்ச்சியுறுவனவாயின. பலராய் நிறைந்திருந்த அரசர் ஆட்சிகள் மறைந்தொழிந்தாலும், ஒருவனய் உள்ள ஆண்டவன் ஆட்சி என்றும் மறைதல் இல்லை. அதனல் அவன் அருளைப் பெறவிரும்புவோர் அவனது திருக்கோயிலுக்குச் சென்று வழிபடும் முறையை நன்கறிந்து கொள்ளுதல் மிக மிக இன்றியமையாததாகும்.

இறையுணர்வு :

'அரசியல் நிலையங்களில் அதிகாரிகள் இருப்பதுபோல, திருக்கோயிலில் ஆண்டவன் இருக்கின்ருன்' என்ற உணர்ச்சி உண்மையாக ஒருவர் உள்ளத்தில் தோன்றுமானல், அவருக்கு, 'அங்கு முறைப்படிதான் செல்ல வேண்டும், வணங்க வேண்டும்' என்று ஒருவர் சொல்லத் தேவை இல்லை; அவ்வெண்ணம் அவருக்குத் தானே தோன்றும்; அதை அறிந்துகொள்ள முற்படுவார். அவ்வாறின்றி, எத்தனையோ வழக்கங்களில் இதுவும் ஒரு வழக்கமாக கோயிலுக்குப் போகிருேம் சிற்பம் முதலியவைகளைக் கண்டு களிக்கிருேம்; ஆண்டவனுக்கும் ஒரு வணக்கம் செலுத்தி வருகிருேம்' என்று எண்ணுகிறவர்கள், அங்கு முறையாகத்தான் சென்று வணங்கவேண்டும் என்பதில் ஊக்கம் காட்டமாட்டார்கள்; பலனும் அவர்களுக்கு அந்த அளவில்தான் இருக்கும். கோயிலும், ஆண்டவனது அருளுருவங்களும் அவர்களுக்குச் சிற்பக் கூடங்களும், சிற்பங்களுமாய்த்தான் இருந்துவிடும். ஆகையால், ஆலய வழிபாட்டின் முறையை உணர்ந்து பக்தி சிரத்தையுடன் வழிபடுவதே ஆண்டவன் அருளை உண்மையாக நாடுபவர்கட்குக் கடமையாகும்.

(தொடரும்)

செய்திகள்

ஏகதின லக்ஷார்ச்சனை

தருமையாதீனத்தில் :

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் திருக்கோயிலில் 6-2-64 வியாழக்கிழமை ஸ்ரீ ஞானபுரீசுவரருக்கு ருத்ராபிஷேகமும், காலை தொடங்கி லக்ஷார்ச்சனையும் ஸ்ரீ ஞானம்பிகைக்கு சந்தனக் காப்பு அலங்காரமும் நவசக்தி யர்ச்சனையும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் நடைபெற்றன. மாலையில் லக்ஷார்ச்சனை பூர்த்தி யாகியது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபட்டார்கள். அன்பர்கள் பலரும் வந்து வழி பட்டுப் பிரசாதம்பெற்று உய்ந்தனர்.

ஸ்ரீ துர்க்காம்பிகை திருக்கோயிலில்:-

7-2-64 தைமாதக் கடைவெள்ளிக் கிழமையைக் குறித்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களருளால் ஸ்ரீ அஷ்டா தசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகை திருக்கோயிலில் ஸ்ரீ துர்க்காம் பிகைக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சந்தனக்காப்பு அலங்காரமும் நடைபெற்றன. காலையில் லக்ஷார்ச்சனை தொடங்கி இரவு பூர்த்தியாகியது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபட்டார்கள். அன்பர்கள் பலர்வந்து தரிசித்து உய்ந்தனர்.

ஆலவேலி கிராமத்தில் :

கும்பாபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான ஆலவேலி கிராமத்தில் சித்திவிநாயகர் திருக்கோயிலைப் புதிதாகக்கட்டி சுதைவேலைகள் செய்து வர்ணம் தீட்டி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களால் கும்பாபிஷேகமும் செய்விக்கப்பெற்றது. 1—2—64 சனிக்கிழமை அனுக்ஞை முதலியன நிகழ்ந்தன. யாகசாலை தொடங்கப்பெற்றது.

2—2—64 ஞாயிற்றுக்கிழமை காலை மணி 8·40 க்குமேல் 9 மணிக்குள் மகா கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி தரிசனம் செய்தார்கள். கிராம மக்களும், மற்றும் பலபிரமுகர்களும் வந்து தரிசித்து உய்ந்தனர்.

திருக்கடவூரில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீஅமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சோபகிருது ஆண்டு தைமாதம் 25ஆம் நாள் (7—2—64) வெள்ளிக்கிழமை ஸ்ரீ அபிராமி அம்பாளுக்கு தைமாதக் கடை வெள்ளியை முன்னிட்டு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், சந்தனக்காப்பு அலங்காரமும் நிகழ்ந்தன. அம்பாள் சந்நிதியில் புஷ்பப் பந்தல் அலங்காரமும் செய்யப்பெற்றது.

அன்று மாலை 7·மணி அளவில் ஸ்ரீ அபிராமி அம்பாளுக்கு வயிரக் காதணி அணிவிக்கப்பெற்றது. (கோயம்புத்தூர் திரு. P. L. கண்ணப்பச் செட்டியார் மனைவி மீனாக்ஷி ஆச்சியால் உபயமாகக் கொடுக்கப்பெற்ற வயிரத்தோடு இதில் பொருத்தப் பட்டுள்ளது.) ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். அன்பர்கள் பலர் வந்து தரிசித்து மகிழ்ந்தனர்.

மாலை 6 மணிக்குச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி, மகா வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் "அபிராமிபட்டர்" என்ற தலைப்பிலும், தருமையாதீனம் ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியை வித்துவான். திருமதி. ப. நீலா அவர்கள் "அபிராமி அந்தாதி" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்கள். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

வேளூரில் :

தைச்செவ்வாய்த் திருநாள்

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமை யாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கு தைச்செவ்வாய் திருநாள் (சோபகிருது தை 20) 2-2-64 ஞாயிற்றுக்கிழமைமுதல் தொடங்கி

நடைபெறுகிறது. 11—2—64 தைமாதக் கடைசிச் செவ்வாய் யன்று சித்தாமிர்த தீர்த்தத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி தீர்த்தங் கொடுத்தருளல் நிகழும். தைச்செவ்வாய்த் திருநாளை முன்னிட்டு சமயச்சொற்பொழிவுகளும் கதாகாலக்ஷேபங்களும் மாலை 6 மணிக்குத்தொடங்கி நிகழ்கின்றன.

2-2-64 ஞாயிற்றுக்கிழமை தஞ்சாவூர் திருமதி. T. R. கமலா மூர்த்தி குழுவினரால் அர்ச்சுன பாசுபதாஸ்திரம் என்ற தலைப்பில் கதாகாலக்ஷேபம் செய்யப்பெற்றது. சீகாழி செய்தியாளர் திரு. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் முருகன் என்ற தலைப்பிலும். 3—2—64 திங்கட்கிழமை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி பொறுப்பு முதல்வர், திருநெறிச்செம்மல் வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் அருணகிரியாரும் அலங்கார மும் என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர்.

4—2—64 செவ்வாய்க்கிழமை தருமையாதீனம் ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியை வித்துவான். திருமதி. ப. நீலா அவர்கள் "அஞ்சொல் தமிழோர் புகழ் வேளூரரசன்" என்றதலைப்பில் சொற்பொழிவாற்றினர். பின்னர் திருப்பனந்தாள் திரு. க. சண்முகசுந்தரம் குழுவினரின் வீணை இன்னிசை நடை பெற்றது.

5—2—64 புதன், வியாழக்கிழமைகளில் தருமையாதீனப் புலவர், பாகவதர் எம்பார், ஸ்ரீரங்கம் ஸ்ரீமத். விஜயராகவாச்சாரி யார் குழுவினரால் "வள்ளித் திருமணமும், தெய்வயானை திருமணமும்" கதாகாலக்ஷேபமாகச் செய்யப்பெற்றது.

7—2—64 வெள்ளிக்கிழமை திருவையாறு செய்தியாளர் திரு. G. தனவேலுப்பிள்ளை அவர்கள் "முருகன் திருவருள்" என்ற தலைப்பிலும் திருக்கருகாவூர். திரு. கோ. சிவஞானம் அவர்கள் "அருள்நெறி" என்ற தலைப்பிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர், திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை M. A., B. L., அவர்கள் "அருணகிரி யாரும் அநுபூதியும்" என்ற தலைப்பிலும், 9—2—64 ஞாயிற்றுக் கிழமை புதுக்கோட்டை மகளிர் ஆஸ்ரமம், ஸ்ரீமதி. சிவ. பிருந்தா தேவி அவர்கள் "பெரும்பெயர் முருகன்" என்ற தலைப்பிலும். சொற்பொழிவாற்றினர். பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

10-2-64 திங்கட்கிழமை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன் அவர்கள் "குமரகுருபரரும் குமரகுருபரனும்" என்ற தலைப்பி லும், 11—2—64 செவ்வாய்க்கிழமை தருமையாதீனத் தமிழ்ப்

பேராசிரியர், தருமையாதீனத் தமிழ்ப் புலவர், சித்தாந்தக்கலை மணி, மகாவித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள், "சம்பந்தசரணாலயரும் சரவணபவனும்" என்ற தலைப்பிலும், சொற்பொழிவாற்றுவர்.

ஆதீன தேவஸ்தானங்களில்

பாவை மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான தேவஸ்தானங்களில் பாவை மாநாடு சிறந்த முறையில் நிகழ்ந்தது. 4—1—64 சனிக்கிழமை குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் திருவையாறு செய்தியாளர் திரு. ஜி. தனவேலுப்பிள்ளை அவர்களும், விளநகர் ஸ்ரீ துறைக்காட்டும் வள்ளலார் சுவாமி தேவஸ்தானத்தில் 10—1—64 வெள்ளிக்கிழமை யன்றும் ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்தில் 6--1--64 திங்கட்கிழமை யன்றும் திருக்கருகாவூர் திரு. கோ. சிவஞானம் அவர்களும், திருமுல்லைவாசல் ஸ்ரீ முல்லைவனநாத சுவாமி தேவஸ்தானத்தில் 9—1—64 வியாழக்கிழமை ஆதீனப்பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களும் "பாவையும் பள்ளியெழுச்சியும்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர். ஆங்காங்கும் அன்பர்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

திருக்குவளையில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 4, 5—1—64 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 7மணிக்குப் பாவை மாநாடு நிகழ்ந்தது. தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்கள் திரு. வி. சா. குருசாமிதேசிகர், திரு. வி. சபேசன், திரு, சி, அருணைவடிவேல் முதலியார் ஆகியோர் முறையே "பாவைப்பாடல்கள்," "பள்ளியெழுச்சி" "நீத்தல் விண்ணப்பம்" ஆகிய தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர். பெருமக்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

திருபுவனத்தில்:

தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 9—1—64 வியாழக்கிழமை மாலை 6 மணி முதல் பாவைமாநாடு நடைபெற்றது.

பாவைப்பாடல்கள் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன. திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி பிரின்ஸிபால் சிவநெறிச்செல்வர் வித்துவான் திரு. K. M. வேங்கடராமையா M. A. அவர்களும் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான், சிரோமணி திரு. வி. சபேசன் அவர்களும் முறையே "திருவெம்பாவை" திருப்பள்ளி யெழுச்சி " என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர். நாகப்பட்டினம் தேசிய உயர்பள்ளித் தமிழாசிரியர், தருமையாதீனப் புலவர், வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் குழுவினரால் மணிவாசகர் வரலாறு கதாகாலக்ஷேபமாகச் செய்யப்பெற்றது. அன்பர்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

திருப்பனந்தாளில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 8, 9—1—64 ஆகிய புதன் வியாழக்கிழமைகளில் மாலை 6-மணிக்குத் தொடங்கி பாவை மாநாடு சிறப்புற நிகழ்ந்தது. பாவைப் பாடல்கள் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன. 8—1—64 அன்று சென்னை கலைமகள் ஆசிரியர், செந்தமிழ்ச் செல்வர், வித்துவான். திரு. கி. வா. ஜகந்நாதன், M. A.. அவர்களும் திருவையாறு கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர் வித்துவான். திரு. வை. சுந்தரேசவாண்டையார் அவர்களும், A. V. C. கல்லூரி விரிவுரையாளர் திரு. T. சிவகுமார் M, A. அவர்களும் முறையே எங்கெழிலென் ஞாயிறு, பாவையும் பள்ளியெழுச்சியும். பக்திநெறி என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர். 9—1—64 அன்று செஞ்சொற்கொண்டல் வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் M.A. அவர்களும் திருவையாறு திரு. ஜி. தனவேலுப்பிள்ளை அவர்களும் முறையே திருச்சதகம், மணிவாசகர் என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

திருவையாற்றில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீபஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 7—1—64 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்குப் பாவை மாநாடு மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. சென்னை, திருக்கோயில் ஆசிரியர். புலவர். திரு. N. R. முருகவேள் M. A., M. O. L. அவர்களும் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர். தருமையாதீனப் புலவர், வித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களும், திருக்கருகாவூர்

திரு. கோ. சிவஞானம் அவர்களும் முறையே இருபாவை, திருவாசகம். திருப்பள்ளியெழுச்சி ஆகிய தலைப்புக்களில் சொற்பெருக்காற்றினர். திருவாரூர் திரு. K. சாம்பசிவ முதலியார் குழுவினரால் மணிவாசகர் வரலாறு கதாகாலக்ஷேபமாகச் செய்யப்பெற்றது. பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

தேவாரவகுப்பு ஆண்டுவிழா

திருவையாறு தேவஸ்தானத் தேவார வகுப்பு ஆண்டுவிழா ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாணையின் வண்ணம் திருக்கோயிலில் 8—1—64 புதன்கிழமை மாலை 6-மணிக்கு நடைபெற்றது. அவ்வமயம் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி பிரின்ஸிபால், சிவநெறிச் செல்வர், வித்துவான். திரு. K. M. வேங்கடராமையா M.A, அவர்களும் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர் திருநெறிச் செம்மல், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களும், முறையே பன்னிருதிருமுறை, திருமுறைப்பயன் என்ற பொருள்களில் விரிவுரையாற்றினர். தேவார வகுப்பு மாணவ மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன. பண்ணிசை வாணர்களின் பாராயணத்துடன் திருமுறைகள் திருவீதியுலா நிகழ்ந்தது. அன்பர்கள் பலர் வந்து கண்டும் கேட்டும் மகிழ்ந்தனர்.

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில்

பொங்கல் விழா

சென்னை, சமயப் பிரசார நிலையத்தில் 14—1—64 மாலை 6-30 மணிக்குப் பொங்கல்விழா கொண்டாடப்பெற்றது. சென்னை அரசாங்க ஆட்சிமொழிக் குழுச் செயலாளர் திரு. S. கணேசம் பிள்ளை விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். "பாக்கியலக்ஷ்மி" ஆசிரியர் திரு. B. சொக்கலிங்கம் அவர்கள் "புதுமைபொங்கும் புனிதத் திருநாள்" என்பதுபற்றி அரியதொரு விரிவுரை ஆற்றினார்கள். ஆற்றுகையில் பாரததேசம் முழுவதும் கொண்டாடுகின்ற விழா இப் பொங்கல்விழா என்றும், இருப்பினும் தமிழ்நாட்டில் மிக்க சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது என்றும். புது தான்யங்களைப் புதுப்பானையில் புதிய அடுப்பில் வைத்துப் பொங்கி இவற்றிற்குக் காரணமாயிருக்கும்

இந்திரனுக்கும் சூரியனுக்கும் பசுவினங்கட்கும் வழிபாடு நிகழ்த்து வது தமிழர்களின் நன்றியறிதற் பண்பாட்டை விளக்குவதா யுள்ளது என்றும், கிடைத்த பொருளை இறைவனுக்கும், உதவியா யிருந்தவர்கட்கும் முதலில் காணிக்கை செலுத்தி அனுபவிக்கும் பண்பு புனிதம் மிக்கது என்றும் குறிப்பிட்டார்கள். தலைவர் தமது தலைமையுரையில் சூரிய வழிபாட்டின் தொன்மையையும், புது தான்யங்களை வீட்டுக்குக் கொண்டுவரும்போது விழாக் கொண்டாடுவது உலகில் எங்கும் இருந்துவந்த போதிலும், தெய்வத்தை முன்வைத்துப்போற்றும் புனிதப்பண்பு நமது பாரத நாட்டில்தான் இருக்கிறது என்றும், அதிலும் சிறப்பாகத் தமிழ் நாட்டில்தான் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்கள். திரு. P. சுவாமிநாதன் கடவுள் வணக்கம் பாடினர். நிறைவில் தியாகராயநகர் "கீதா சத் சங்கத்தார்" முருகநாம பஜனை நிகழ்த்தினர். ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினர்கள்.

வேளூர்க் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையக் கிருத்திகைப் பிரசாதம் பெறும் உறுப்பினர்கள் சார்பில் வைத்தீஸ்வரன்கோயில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும், ஸ்ரீ தையல்நாயகி உடனுறை ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்கும் 24—1—64 கிருத்திகையன்று அபிஷேகம், சகஸ்ரநாமார்ச்சனை நிகழ்த்திய விபூதி, குங்கும, சந்தனக்குழம்பு பிரசாதம் 25—1—64 மாலை 7 மணிக்குச் சென்னை, சமயப் பிரசார நிலையத்தில் திரு. K. E. அருணாசல முதலியார் M. A., B. Com., அவர்கள் தலைமை யில் பிரார்த்தனை நிகழ்த்தி வழங்கப்பட்டது. நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. P. சுவாமிநாதன் அவர்கள் வேளூர்த் தேவாரம், திருப்புகழ், பிள்ளைத்தமிழ்ப் பாடல்களை இசையுடன் ஓதிப் பிரார்த்தனை புரிந்தார். இப்பிரசாதத்தைத் தொடர்ந்து பெற்று வரும் எனக்குப் பல நன்மைகள் கிடைத்திருக்கின்றன என்றும், நம்பிக்கையோடு இறைவனை வழிபடுவோருக்கு எல்லா நலங்களும் உண்டாகும் என்றும் தலைவர் அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்கள். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினர்கள். உறுப்பினர்களும், அன்பர்களும் பிரசாதம் பெற்றுச் சென்றனர்.

எதிர்காலம்

திரு. கே. முத்துஜோதிடர்

(சோபகிருதுஷூ மாசிமீ 1ஊ முதல் 30ஊ முடிய)

(13—2—64 முதல் 13—3—64)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிசிரமான பலன்களைத் தரும். வரவுக்குமேல் செலவுகளையும், அலைச்சலையும் கொடுக்கும். குடும்பத் தொல்லைகளும் அதிகம் காட்டும், ஆனாலும், வரவு குறையாது. கீர்த்தி ஏற்படும். புதன் வியாழன் சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½.

கார்த்திகை 2-3-4 பாதங்களும் பூர்ண சுபமிராது. அடிக்கடி சஞ்சாரங்களையும் கவலைகளையும் கொடுக்கும். ரோகிணி நான்கு பாதங்களும் தொழில் நிமித்தம் இடம்மாறச் செய்யும்; ஆனாலும் உத்தியோக உயர்வு உண்டாகும்; மிருகசிர்ஷம் 1-2 பாதம் சரீர பீடையைத் தரும். வைத்திய செலவு அதிகமாகும். மனம் கலக்கமாகவே இருந்துகொண்டு இருக்கும். சனி செவ்வாய் சுபமாகும்

3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾.

மிதுனராசி 9 பாதங்களும் கிரஹ சுகபோகங்களைத் தரும். உத்தியோக உயர்வும் ஸ்தாவர சங்கம சொத்துக்களில் லாபமும் ஏற்படும். வித்தியாவிருத்தியாகும், திங்கள் புதன் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் விசேஷமான ஜெயத்தையும் வெகுகாலமாய்த் தீராத கடன் நிவாரணத்தையும் செய்து உலக பிரசித்தியைத் தந்து கீர்த்தி உண்டுபண்ணும். வித்தியாவிருத்தி ஏற்படச்செய்யும். தனதான்ய லாபம் ஏற்படும்; மனம் சாந்தி அடையும். வியாழன் வெள்ளி சுபமாகும்,

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 மாதங்களும் சுபமேயாகும். உத்தியோக உயர்வு ஏற்படும், ஸ்திர சுகவாசம் ஏற்படச்செய்யும், வம்சவிர்த்தியாகும் மனம் சந்தோஷமடையும். சனி ஞாயிறு சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

உத்திரம் 2-3-4 பாதங்கள் சமபலனைத்தரும்; சகல காரியங்களிலும் தவக்கம் உண்டுபண்ணும். ஹஸ்தம் நான்குபாதங்களும் மிச்ரபலனைத் தரும், ஆரோக்யக் குறைவு காட்டும், தனதான்ய லாபங்கள் குறையச் செய்யும், மனம் சாந்தியில்லாமல் இருக்கும். ஆனாலும் சதா தெய்வ சிந்தனைகளையும், மேலோர் பெரியோர்களுடைய ஆசிகளையும் தரும். தெய்வபலம் முன்னிற்கும், எங்கும் விசாலமான கீர்த்தியும் ஒருவராலும் சாதிக்கமுடியாத காரியங்கள் எல்லாம் சுலப சாத்தியமாகும். சித்திரை 1-2 பாதங்கள் வீண் செலவுகளும் நஷ்டங்களும் உண்டுபண்ணும். சதா கவலையைத் தரும். வெள்ளி சனி சுபமாகும்.

7. துலாம். சித்திரை ½, - சுவாதி - விசாகம் ¾.

சித்திரை 3-4 பாதங்கள் சமபலனைத்தரும், சுகதுக்கம் சமமாகும். சுவாதி நான்கு பாதங்களும் விசாகம் 1-2-3 பாதங்களும் மிச்ரபலனைத்தரும், வரவுசெலவுசமமாகும், விசேஷ கௌரவங்களும் மேலோர் பெரியோர்களுடைய அன்பும், தெய்வசக்தியும் ஓங்கி நிற்கும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். செவ்வாய் வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

விருச்சிக ராசி 9 பாதங்களும் கிரகசுகத்தைத் தரும், ஆடை ஆபரணச்சேர்க்கை உண்டாகும். ஜீவனலாபம் ஓங்கும், பரிசு போலொத்த எதிர்பாராத லாபங்களை உண்டுபண்ணும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 மாதங்களும் மிச்ரபலனைத்தரும், விவசாய லாபம் குறைந்து காட்டும் வைத்தியச் செலவு அதிகமாகும். ஆனாலும், நன்மை உண்டுபண்ணும், தெய்வபலம் காக்கும்,

எதிர்பாராதபடி நஷ்டமான பொருள் வந்துசேரும். சனி ஞாயிறு சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் சுப சந்தோஷங்களைத் தரும் இல்லற சுகம் ஓங்கும் ஜீவன லாபம் அதிகமாகும், மேலோர் பெரியோர் அன்புகிட்டும், தெய்வீகத்தோற்றம் உண்டுபண்ணும் திங்கள் புதன் சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி - $\frac{3}{4}$.

கும்பராசி 9 பாதங்களும் தீராத கவலைகளைத் தீர்த்து வைக்கும் கடன்தொல்லை நீங்கும், ஸ்தாவர சங்கம சொத்துக்கள் சேரும் ஜீவன விருத்தி ஏற்படும். கிரக சுகம் உண்டுபண்ணும். திங்கள் புதன் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபமேயாகும்: உத்தியோக உயர்வும் பெரியோர்களின் சினேகமும் நூதனமாகத் தொழில் வியாபார விருத்தியும் கிரய விக்கிரய லாபங்களும் கட்டிட வேலைகளும் ஏற்படும். தெய்வீகம் பிரகாசிக்கும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

குறிப்பு:- மேற்படி மாதம் உலகில் மேலோர் பெரியோர் தர்மிஷ்டர்கள் உலக நிர்வாகிகள் ஸஜ்ஜனங்கள் பக்திமான்கள் எல்லோரும் ஏகமனதாகச் சென்ற மாதங்களில் எழுதியபடி உலக க்ஷேமத்தின் பொருட்டும் நமது ஜனநாயக காங்கிரஸ் ராஜாங்கமும் தலைவர்களும் சகல க்ஷேமத்தையும் ஆரோக்கியத்தையும் அடைவதின்பொருட்டும் எவ்வித பயமும் நம்மை அணுகாமல் சுபிக்ஷத்தைத் தந்து உலகில் முதன்மையான தேசமாக இருப்பதின் பொருட்டு தெய்வீகமானபலத்தை பிரார்த்தித்துக்கொண்டு ஸகல வேற்றுமைகளையும் மறந்து ஸர்வபிரகாரமாகவும் கடமைகளைத் தவறாமல் செய்துகொண்டுவர கிரஹங்களின் மூலமாய்த் தெரியவரும் எதிர்கால பலன்களை ஜெயித்து ஸகல ஸௌக்கியத்தையும் கடவுள் அருளால் அநுபவிக்க நேரும். கடவுள் காப்பார்

சுபம்.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப் பிரசார நிலையத்தில்

திரிசூலத்தில் மாதாந்தர வழிபாடு

சென்னை, சமயப் பிரசார நிலையத்தில் மாதாந்தர சமயப் பிரசாரமும் வழிபாடும் பல்லாவரத்தை அடுத்துள்ள திரிசூலம் ஸ்ரீ திரிபுரசுந்தரி சமேத ஸ்ரீ பிரம்மபுரீசர் ஆலயத்தில் 12—1—64 ஞாயிற்றுக்கிழமை மாலை வெகு சிறப்பாக நடைபெற்றன. நிலைய வழிபாட்டுக் குழுவினர் அன்று கோயிலைச் சுத்தம் செய்து கோலம் இட்டு அலங்கரித்தனர். மாலை 4 மணிக்குச் சிவபுராணம் ஓதிக்கொண்டு மாட வீதி வலம் வந்து திருக்கோயிலுக்குள் சென்று அபிஷேக ஆராதனை நிகழ்த்தி முறையாக வழிபாடாற்றினர். அன்று பிரதோஷமாதலால் பிரதோஷ காலத்தில் தரிசனம் செய்தது சிறப்பாய் அமைந்தது. வழிபாட்டின் பின்னர் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் திரு. ச. சிவகுமாரன் அவர்களும், திரு. K. கமலக்கண்ணன் அவர்களும் சமயச் சொற்பொழிவு நிகழ்த்தினர். சுவாமிகள் அவர்கள் சமயப் பண்பு மக்கள் வாழ்வில் மலர, சேரிப் பிரசாரமும், சிற்றூர்ப் பிரசாரமும் அதிகரிக்கவேண்டிய சூழ்நிலையை விளக்கினார்கள். சிவகுமாரன் அவர்கள் கோயில் உள்ள ஊரில் குடியிருக்கும் மக்கள் அன்றாடம் கோயிலுக்குச் சென்று வழிபட வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். கமலக்கண்ணன் அவர்கள் உலக வாழ்வில் எத்துறையில் வேலை பார்த்தாலும் அவ்வவரும் இறை உணர்வோடு வாழவேண்டும். அப்படி வாழ்ந்தால் எல்லோரும் குற்றம் அதிகம் செய்யாமல் வாழ முடியும் என்று கூறினார்கள். நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. P. சுவாமிநாதன் அவர்களும், குழுவினரும் தேவாரப் பாடல்கள் மூலம் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்த்தினர். காண்ட்ராக்ட் திரு. குப்புசாமி அய்யர் அவர்கள் குழுவினரை வரவேற்று வழிபாட்டையும், சமயப் பிரசாரத்தையும் உடனிருந்து சிறப்புற நடத்தி வைத்தார்கள்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

Came with a party - Sri Kannabhiran Pillai - Durban - Sm. Dr. Thirupurasundari - In all my humble pilgrimages from Kathmandu to Kanyakumari, I have not found a sacred shrine so spotlessly clean - It is a tribute to Sri-la-Sri Dharmapuram Adhinam.

(Sd.) K. R. R. Sastry, M. A., M. L.
Retd. Principal Law College, JAIPUR

The following particulars regarding the ownership of the GNANASAMBANDAM the Monthly newspaper, are published as called for by Rule 8 of the Registration of News papers (Central Rules, 1956).

Form IV

1. Place of publication - DHARMAPURAM
2. Periodicity of its publication - MONTHLY
3. Printer's and Publisher's Name - Sri. K. SUNDARESA IYER
   Nationality - INDIAN
   Address - VELLALAR DOUBLE ST., MAYURAM
4. Editor's Name - Vidwan Srimath- SOMASUNDARATHAMBIRAN SWAMIGAL
   Nationality - INDIAN
   Address - 41, USMAN ROAD, T. NAGAR, MADRAS - 17
5. Names & addresses of individuals who own the Newspaper and partners or Share holders holdingmore than one percent of the total Capital - His Holiness Sri-la-Sri Kailai SUBRAMANIA DESIKA GNANASAMBANDA PARAMACHARYA SWAMIGAL Avl. Tharmapuram Adhinam, Dharmapuram, Mayuram P. O. Tanjore Dt.

I, K. Sundaresa Iyer hereby declare that the particulars given above are true to the best of my knowledge & belief.

(Sd.) K. SUNDARESA IYER,
Publisher.

Dated 30-1-1964.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam press, Dharmapuram (Mayuram) 10-2-64.